தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

திங்களிதழ்

துணர் : ௫௮

மலர் : ௮

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: ௨௲௧௩, -துந்துபி கார்த்திகை

(1982 நவம்பர் - திசம்பர்)

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

MALLIKA ARTS T.T.

THANJAVUR
DEC 1982

தமிழ்ப் பொழில்

துணர்: ருசு] [மலர்: அ

உள்ளுறை:

1) பாரதி மொழிபெயர்ப்பாளர் .. 337
—இராசு. பவுன்துரை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு, சென்னை.

2) புலங்காணாப் புதுக்கல்வெட்டுக்கள் .. 357
—பேரா. சி. கோ. தெய்வநாயகம்,
எம். ஏ; எம் ஃபில்;
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

3) பீடன்று .. 363
சொ. சண்முகானந்தம் (பாரதிப்பித்தன்)
முதல்வர், அரசர் கல்லூரி, திருவையாறு.

4) பூம்புகாரும்
புதைபொருள் ஆய்வுகளும் .. 370
—மோ. அந்தோனிராசு, பி. லிட்., நி. நிலை,
மாணவர், கரந்தைப் புலவர் கல்லூரி.

5) மருத்துவச் சுவடிகளில் நிறங்கள் 376
—த. அழகப்பராசு,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு, சென்னை.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருசு	திருவள்ளுவர் யாண்டு உகூகஉ துந்துபி—கார்த்திகை 1982 நவம்பர்—திசம்பர்	மலர் அ

தமிழ் வாழ்க

பாரதி—மொழி பெயர்ப்பாளர்

இராசு. பவுன்துரை

முன்னுரை:

''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்''

என்ற பாரதி,

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்''

என்பதையும் எடுத்துரைக்கின்றார், தான் வாழும் சமுதாயத்தை நேசித்தவர் கவி பாரதி.

''ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொல் கேளீர்''

எனக் குரல் எழுப்பி தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்கிறார்.

''புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை''

என்ற உரை கேட்டதும்,

''என்றந்தப் பேதை உரைத்தான் — ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?

என உணர்ச்சியுரையைக் கொட்டுகின்றார். இவ்வுணர்ச்சிவுரையைச் செயல் வடிவில் காட்டியவர்தான் மகாகவி பாரதி.

தமிழ் இலக்கியத்திற்கு — சமுதாயத்திற்கு பெரும் உதவியாக அமைய வேண்டி பல மொழிபெயர்ப்புகளைச் செய்தார். தான் கண்ட, ரசித்த, வேண்டிய செய்திகளை மொழிபெயர்த்துக் கொடுத்தார். கவிதை, கதை, கட்டுரை வடிவில் உலகச் செய்திகளைத் தமிழ்ச் சமுதாய விழிப்புணர்ச்சிக்கு அளித்தார். அவருடைய படைப்புகளில் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது மொழிபெயர்ப்புமாகும். இம் மொழிபெயர்ப்புகள் பாரதியின் பன்மொழிப் புலமையினையும் பரந்துபட்ட ஞானத்தையும் காட்ட வல்லன எனலாம்,

மொழிபெயர்ப்பாளர்:

ஆயிரத்துத் தொளாயிரத்து நான்கில் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராக இருந்தபோது தினம் ஆங்கிலக் கட்டுரைகளையும் செய்திகளையும் நாட்டு நடப்புகளையும் கூர்ந்து கவனித்துச் செய்திகளை மொழிபெயர்த்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பில் இருந்தார் பாரதியார். பத்திரிக்கையின் அதிபரான சுப்பிரமணிய அய்யர் தன்னை மொழிபெயர்ப்புப் பணியில் அதிகம் ஈடுபடுத்தியது குறித்துப் பாரதியாரே,

> ''அய்யர் என்னை அன்பைக் கொண்டு ஏய்த்தது உண்மை; என்றாலும் இந்த மொழிபெயர்ப்பு வேலை எனக்கு எவ்வளவு ஒத்தாசை செய்தது தெரியுமா? இங்கிலிஷ் ரொம்ப நயமான பாஷையானதால், இங்கிலீஷ் எழுத்தின் கருத்து சிதைந்து போகாமல் தமிழர்களுக்கு அதை ஸ்வராஸ்யமாகச் சொல்லும் பொருட்டு, நேரான தமிழ்ச்சொற்களை நான் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. தமிழ்ப் பாஷையின் கம்பீரமும் ரஸமும் அப்பொழுது இன்னும் தெளிவாய்த் தெரிந்தன''[1]

என்க் கூறுகின்றார்.

ஒரு மொழிபெயர்ப்பாளன் எவ்வாறு தம் தாய்மொழியின் கருத்துக்கும் பண்பாட்டிற்கும் மாசற்ற மொழிபெயர்ப்பைக் கொடுக்க விரும்புகிறானோ அவ்வாறே மூலநூல் மொழியின் தன்மையைக் கெடுத்துவிடக் கூடாது என்று உறுதி இருக்க வேண்டும். இக்கருத்தினை ''ரொம்ப நயமான பாஷையானதால் இங்கிலீஷ் எழுத்தின் கருத்து சிதைந்து போகாமல் ......'' எனக் குறிப்பிடும் பாரதியார் அதற்குத் தாமே ஒரு சான்றாகவும் அமைந்து காட்டியுள்ளார்.

நல்ல மொழிபெயர்ப்பாக அமைய வேண்டுமெனில் மொழிபெயர்ப்பாளன் பல மொழிகளிலும் நல்ல அறிவு, ஆற்றல் உடைய

வராக இருத்தல் வேண்டும். ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்கு மொழிபெயர்க்குமிடத்து, மொழிபெயர்க்கப்படும் மொழியின் அறிவு, எவ்வளவு முக்கியமோ அவ்வளவு அறிவு மூலநூல் மொழியிலும் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பின் அஃது ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாக அமையும்.

பாரதியின் படைப்புகளில் பல மொழிபெயர்ப்புகளில் வடமொழி, ஆங்கிலம், வங்காள மொழி, பிரெஞ்சு போன்றவை இடம் பெற்றுள்ளன. பாரதி தான் ஒரு பன்மொழி அறிந்தோன் என்பதை,

> ''உலகத்திலுள்ள ஜாதியர்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிகளுக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கம் உண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை''

எனத் 'தமிழ்' [3, ஏப்பிரல் 1916] எனும் கட்டுரையில் கூறுகின்றார். இது வெறும் புகழ்ச்சியில்லை உண்மைதான்.

பத்திரிகைப் பணி:

பாரதியின் இலக்கிய வாழ்க்கையின் நல்ல தொடக்கம் 'வங்கத்தை' வாழ்த்திய பாடலோடு' நிகழ்ந்தது எனக் கூறலாம் [15, 9, 1905-இல், சுதேசமித்திரன்]. இருப்பினும் மதுரை 'விவேகபாநு' இதழில் ஆயிரத்துத் தொளாயிரத்து நான்கு சூலையில் முதற்பாடல் வெளிவந்தது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐந்து, நவம்பர் முதல் சுதேசமித்திரனில் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். அதே சமயம் 'சக்கரவர்த்தினி'யின் ஆசிரியராகவும் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐந்து முதல் ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறாம் ஆண்டு ஆகஃச்டு வரை பணியாற்றுகின்றார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறாம் ஆண்டு பாரதியின் வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்ட வருடமாகும். ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறில் காங்கிரசு மாநாட்டில் கலந்து கொள்கின்றார். பின்னர் மித்திரன் தொடர்பை விட்டுவிட்டு 'இந்தியா' பத்திரிகையிலும் -Bala Bharata- எனும் ஆங்கில இதழிலும் அரசியல் கட்டுரைகளுக்கு முக்கிய இடம் கொடுத்து எழுதுகின்றார். பாரதத்தின் மிகப் பெரிய எழுத்தாளர்களுடைய வரிசையில் 'பாரதி' இடம்பெற்றார் எனலாம்.

திலகரின் தொடர்பால் அவரைக் 'குருநாதர்' என்று அழைக் கின்றார். அவருடைய உரைகளை மொழிபெயர்க்கத் துவங்கி னார். ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டில் புதுவையில் 'இந்தியா' பத்திரிக்கையைத் தொடங்கி நெருப்பு மழையென மொழிகிறார். பாரதியின் எழுத்தாற்றல் தீவிரம் அடைந்தது. ஆயிரத்துத் தொளா யிரத்து ஒன்பது—ஆயிரத்துத் தொளாயிரத்து பத்தில் 'கர்மயோகி', 'தர்மா', 'சூர்யோதயம்', 'விஜயா' ஆகிய இதழ்களில் எழுதினார். ஆயிரத்துத் தொளாயிரத்து பதின்மூன்று — ஆயிரத்து த் தொளா யிரத்து பதினைந்தில் சுதேசமித்திரனில் எழுதத் தொடங்கினார். இக்காலக் கட்டத்தில் **New India commen weal Arya, Hindu** போன்ற ஆங்கிலப் பத்திரிக்கைகளிலும் எழுதுகின்றார். மீண்டும் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபது நவம்பர் மாதம் முதல் சுதேச மித்திரன் பத்திரிகையில் பணியாற்றத் தொடங்குகிறார். ஏறத் தாழ இறக்கும் வரையிலும் பாரதியார் அப்பத்திரிகையில் எழுதி யுள்ளார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து நான்கு முதல் ஆயிரத்து தொளா யிரத்து இருபது வரை வெளிவந்த பாரதியின் படைப்புகளைக் காணும்பொழுது, பாரதி கவிதையில் மட்டுமல்லாது — கதை — உரைநடை—மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் சிறப்புப் பெற் றதை அறியலாம். பாரதி ஒரு சிறந்த கவிஞர்; அதே நேரத்தில் பாரதி ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார் என்பதை அவ ருடைய படைப்புகள் எடுத்தியம்புகின்றன. அதற்குத் துணையாய் இருந்தவை ஆங்கில அறிவும், எழுத்தாற்றலுமாகும்.

மொழிபெயர்ப்பின் தேவை:

மொழிபெயர்ப்பாளனாக இலக்கிய வாழ்க்கையைத் தொடங் கிய பாரதி, மொழிபெயர்ப்பின் தேவை குறித்துப் பலவிடங்களில் சுட்டிக் காட்டுகின்றார். ஏழு—ஏழு—ஆயிரத்துத் தொளாயிரத்து பதினாறில் சுதேசமித்திரனில் ஆங்கிலம் கற்றவர்களின் திறமை யையும் அதன் அவசியத்தையும் எழுதுகின்றார்.

> ''... ... ... பல விஷயங்களிலும் வழிகாட்டக்கூடிய திறமை, இங்கிலீஷ் படித்த சிலரிடத்திலேதான் காணப் படுகிறது. அதற்குக் காரணம் பூமண்டலத்தின் சாஸ் திரங்களும் நவீன யோசனைகளும் நமது பாஷையில் மொழிபெயர்க்கப்படாமல் இருப்பதொன்று''

எனக் கூறி கவலைப்படுகின்றார்.

> ''தமிழா, பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்களை போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்''

என அன்புக் கட்டளையும் ''தமிழருக்குக்'' கொடுக்கும் பாரதி,

> ''இந்த நிமிஷம் தமிழ் ஜாதியில் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன் ... ... மிகவும் விரைவில் தமிழரின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்''[2]

என உணர்ச்சி வசத்துடன் சபதம் ஏற்கின்றார்.

தேச பக்தியும் தெய்வப் பக்தியும் உடலும் உயிரும்போல் பாவித்தனர். தேசிய மறுமலர்ச்சிக்கு இது வழிவகுக்கும் என்ற எண்ணம் ஓங்கி நின்றது. பாரதத்தின் பழம்பெருமைகளை மக்களிடையே உணர்த்தவும் அவ்வழியை விடுதலை இயக்கத்திற்குக் கருவியாக அமைத்துக் கொள்வதிலும் அதிக ஆர்வம் காட்டினர். இதற்குத் துணையாக மொழிபெயர்ப்புகள் மிகவும் தேவை என்பதை,

> ''வேதம் உபநிஷத்துக்கள், புராணங்கள் இவற்றை இக்காலத்தில் வழங்கும் தேச பாஷைகளில் தெளிவாக மொழிபெயர்க்க வேண்டும்.''[3]

என்கிறார். இந்து மதம் வையகத் தலைமை பெற வேண்டுவதற்கு மூன்று வழிமுறைகளைக் கூறுகிறார், பாரதி. அதில் ''முதல் வழி முறை வேத, உபநிடதங்களின் மொழிபெயர்ப்புகள்''[4] எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே மொழிபெயர்ப்புகள் சமுதாய விழிப்புணர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் உதவியாய் அமையும் என நம்புகிறார். அதே நேரத்தில் நல்ல படைப்புகளை மொழிபெயர்க்க வேண்டும். அவை தரமாகவும் பயனுடையதாகவும் இருக்கவேண்டும் என்கிறார்; அவ்வாறு அமையாத மொழிபெயர்ப்பைப் பற்றி,

> ''உண்மையான கவிதைக்கு தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழிபெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள் அல்லது இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள்; அவர்களுக்கு கொஞ்சம் லாபமேற்படுகிறது''[5]

என கவலையும் மனக் கசப்பு கொண்டும் எழுதுகின்றார்.

உண்மையான மொழிபெயர்ப்பு:

மொழிபெயர்ப்பென்பது ஒரு கலை. அஃது இன்று சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. மொழிபெயர்ப்பு என்பது இரண்டாம்

தர நிலை' என்ற எண்ணம் மாறிவருகின்ற காலம். இன்றைய மொழிபெயர்ப்பாளர்கள் பொதுவாகக் காலத்தை முதன்மைபடுத்தி அவசரத்தில் வெளியிடுகின்றனர். அத்தகைய மொழிபெயர்ப்புகள் தெளிவில்லாது மூலநூலுக்குப் பங்கமாகவும் அமைந்துவிடுகின்றன. இந்நிலை மாற பாரதியின் கருத்துப் பொருந்தும்படியாக உள்ளது. இதனை,

> ''அறிவுடையோர், பொறுமையுடையோர், ஆழ்ந்து சிந்தனை செய்வோர் — இவர்கள் பரபரப்புக் கொள்ளாது காத்திருந்து காத்திருந்து மெல்ல மெல்ல மொழிபெயர்த்துப் பார்க்கின்றார்கள். இவர்களுடைய மொழிபெயர்ப்பிலே உண்மை யகப்படுகின்றது.''6

எனும் பாரதியின் கூற்று சிந்திக்கத் தூண்டுவன. மூலநூலை கெடுத்துவிடக் கூடாது என்பதும், மொழிபெயர்ப்பாளன் கருத்துத் தெளிவு கிடைக்கும்வரை பொறுத்திருந்து சரியான மொழிபெயர்ப்பைக் கொடுக்க வேண்டும் என்பதையும் வலிறுத்துகின்றார். அவ்வாறு அமையாதவை உண்மையான மொழிபெயர்ப்பு இல்லை என்பது பாரதியின் கருத்து.

நடைமுறையில் உள்ள மொழிநடையிலிருந்து மாறுபட்ட நிலையில் 'விளம்பர சபையினர்' எழுதி வெளியிட்டு வந்தனர். இதனைக் கண்ட பாரதி,

> ''பொதுவாக ராஜாங்கத்தாரின் கெஜட்டுகள் நியாய ஸ்தல மொழிபெயர்ப்புகள் முதலிய முக்யமான தமிழ் பிரசுரங்களில் வழுக்கள் நிறைந்தகால் ஸாதாரணத் தமிழருக்கர்த்தமாக வழியில்லாத தமிழ் பாஷையே வழங்கி வருதல் பிரசித்தம்!

என ஆட்சிமொழி மொழிபெயர்ப்பு பற்றிக் குறிப்பிடுகின்றார். கடினமான சொற்களையும், புதுமையுடையோர் அறிந்து கொள்ளும் படியான மொழிநடையும் இருந்தால் சாதாரண மக்களுக்குப் பயன்படாது என்பதைச் சுட்டிக்காட்டி, பொதுநிலையில் அனைவரும் புரிந்துகொள்ளும்படித் தெளிவான நடையில் அமைதலை வேண்டுகிறார்.

மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்:

தமிழில் அறிவியல்துறை வளர்ச்சிக்கு ஏற்ற அமைப்பு இல்லை என்பதை எதிர்க்கின்றார். எல்லா மொழியிலும் எல்லாச் சொற்களும் இருக்கும் என்பதில்லை. இதனால் மொழிபெயர்ப்பில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்நிலை பற்றி;

> ''கோவணம் இல்லாத நிர்வாண தேசத்தாரின் பரிபாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையா

தென்றால் அதற்கு அவர்களுடைய பாஷையின் மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக் கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தை களும் உண்டாக்கிக கொள்வார்கள்''.

என்று 'சொல்லாக்கத்திற்கு' விளக்கம் தருகிறார்.

'தமிழ் பாஷையின் இனிமை' எனும் கட்டுரை ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறில் மித்திரனில் வந்தது. அதில் சொல்களை மொழிபெயர்க்கும் பொழுது அவற்றைத் தெளிவாகக் கண்டு கொடுக்க வேண்டும் என்பதையும், அதில் ஏற்படுகின்ற சிக்கல் களையும் கூறுகின்றார். 'Ghosh' என்பதை 'Kosh' என்று எழுத நேரிடுகிறது என்றும், 'Birendranath Dutta Gupta' என் பதை பீரேந்திரநாத் தத்த குப்தர்' என்று எழுதும் நிலை ஏற்படு கின்றது என்றும் கூறிப்பிடுகின்றார். இந்நிலை மாற ''எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி சில தனிக் குறிகள் ஏற்பாடு செய் துள்ளனர்.'' அவ்வாறே நாமும் சில குறிகள் ஏற்படுத்திக் கொள் ளுதல் அவசியம் என்கிறார். இதனால் சரியான உச்சரிப்புகளைக் கொடுக்க இயலும் என்றுரைக்கின்றார்,

மொழிபெயர்க்கும் பொழுது ஏற்படும் இடர்பாடுகளில் மூல நூலின் சொல்லுக்கு ஏற்ப மொழிபெயர்ப்பில் கொடுக்கும்பொழுது ஏற்படுகின்றது. இச்சிக்கலை 'மெம்பர்' என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல் எனக்கு அகப்படவில்லை. ஆச்சரியத்திலும் ஆச்சரி யம். 'அவயலி' சரியான வார்த்தையில்லை. 'அங்கத்தான்' கட்டி வராது. 'சபிகன்' சரியான பதந்தான். ஆனால் பொது ஜனங் களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துப் கொடுத்தால் புண்ணியமுண்டு, அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன். 'உறுப்பாளி'! ஏதெல்லாமோ நினைத் தேன், ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை என்ன செய்வேன்! கடைசியாக 'மெம்பர்' என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆர அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்லுகின்றேன்[7] என்று அழகாக சுட்டிக்காட்டுகின்றார். சொல்லிற்கு ஏற்ற சரியான சொல் கிடைப்பதில் உள்ள சிக்கல்களை யும், பொது ஜனங்களுக்கு போய் சேர்கின்ற சொற்களாக இருக்க வேண்டும் என்கின்றார். சரியான வார்த்தை கிடைக்கவில்லை எனுமிடத்து எழுத்துப் பெயர்த்து -Transliteration- கொடுத்து விடலாம் என்று அறிவுறுத்துகின்றார். எழுத்துப் பெயர்க்கும் போது அவற்றிற்கு ஒலிக்குறிப்புகள் அவசியம் என்பதையும் வலி யுறுத்துகின்றார்.

வடமொழி மொழிபெயர்ப்புகள்

பாரதியின் மொழிபெயர்ப்புகளில் பல வடமொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவை. வடமொழி நூல்கள் மொழிபெயர்ப்பின் மீது அதிக நாட்டம் ஏற்படக் காரணமாய் அமைந்தது ராமகிருஷ்ணபரமஹம்சர், திலகர், ரவீந்திரநாத் தாகூர், விவேகானந்தர், அரவிந்தர் போன்றோரின் தொடர்பும் அவர்களுடைய எழுச்சிமிக்க தேசிய உணர்வுடைய உரைகளும் ஆகும்.

சிவாவின் ஞானபாநு பத்திரிக்கையில் ஆயிரத்துத் தொளாயிரத்து பதின்மூன்று—ஆயிரத்துத் தொளாயிரத்து பதினைந்தாம் ஆண்டுகளில் 'வேத ரிஷிகளின் கவிதை' எனும் தலைப்பில் வெளிவந்தன. ஆயிரத்துத் தொளாயிரத்து ஒன்பது முதல் ஆயிரத்துத் தொளாயிரத்து பதினொன்று வரை 'கர்மயோகி' எனும் பத்திரிக்கையை நடத்தினார். அதில் 'பதஞ்சலியோக சூத்திரத்தை' தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

"அரவிந்தருடன் சேர்ந்து வேத ஆராய்ச்சியில் பாரதியார் ஈடுபட்டார். பிரெஞ்சு நாட்டிலிருந்து வந்த 'பால் ரிஷார்' தம்பதிகளும் இவர்களுடன் வேத ஆராய்ச்சியில் பங்குகொண்டனர்"[8] எனத் தங்கம்மாள் பாரதி குறிப்பிடுகின்றார். மேலும் "ரிஷிகள் காலத்து நூல்களையெல்லாம் ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சிக்கு அரிய துணையாக அரவிந்தர் கிடைத்தார்"[9] என்றும் குறிப்பிடுகின்றார். இக்காலக்கட்டத்தில்தான் 'தீ' (அக்நிதேவன்) பற்றிய ரிக்வேதப் பாடல்களின் தமிழ்மொழிபெயர்ப்பு வெளியிட்டார்.

பாரதியின் வடமொழிபெயர்ப்பில் 'ரிக்' இடம்பெறுகின்றது. ரிக்வேதத்தில் மண்டலம் ஒன்றிலிருந்து பல ரிக்குகளையும், வெவ்வேறு இடங்களில் இருந்து பல ரிக்குகளையும் தேர்ந்தெடுத்து தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றார்.

"அக்னி ஸ்தோமமும் உபநிடதங்களும்" எனும் கட்டுரையில் சில மொழிபெயர்ப்புகளைக் கொடுக்கின்றார். இவை சிவாவின் ஞானபாநுவில் ஆயிரத்துத் தொளாயிரத்து பதின்மூன்று, ஆயிரத்துத் தொளாயிரத்து பதினைந்தில் வெளிவந்தன.

உபநிடதங்களில் ஈசாவாஸ்ய உபநிடதம் முழுவதையும், கேநோ உபநிடதத்தில் பதினான்கு உபநிடதங்களையும் மொழிபெயர்த்துள்ளார்.

விவேகானந்தரின் 'செயல்முறை வேதாந்தத்தை' தமிழில் மொழிபெயர்த்தார். 'விவேகானந்தரின் புனிதவாக்கு' எனும் தலைப்பில் தமிழ்மொழியில் விவேகானந்தரின் சொற்பொழிவுகளை எழுதியுள்ளார். பல கட்டுரைகளில் இவருடைய உரைகளை மொழிபெயர்த்துப் பயன்படுத்தியும் இருக்கின்றார்.

பகவத்கீதை

சுதேசி இயக்கத்தின்போது 'சக்தி தத்துவம்' இந்தியா முழுவதும் பரவியது. பங்கிம் சந்திரனின் 'வந்தேமாதர கீதம்' இவ்வழிப்பாட்டுக்கு ஆக்கமளித்தது. தாய்நாட்டை அன்னையெனப் போற்றினர். பழ மறைகளைப் போற்றி அவற்றை மக்களிடையே பரப்பினர். ''வேதம், உபநிஷத்துக்கள், புராணங்கள், இவற்றை இக்காலத்தில் வழங்கும் பாஷைகளில் தெளிவாக மொழிபெயர்க்கவேண்டும்'' என்று எழுதுகின்றார் பாரதி. வட மொழியில் உள்ள பகவத்கீதையை தமிழ்மொழிக்கு மொழிபெயர்த்துத் தந்தார். இம்மொழிபெயர்ப்புப் பற்றி,

> ''இத்தமிழ் மொழிபெயர்ப்பு எத்தகையது எனவுரைக்க
> எனக்குப் போதுமான தமிழ் ஞானமில்லை''...
> ''இம்மொழிபெயர்ப்புடன் கூடிய இந்த கீதை
> பெரிதும் பயன்படும்'',

என்று காந்தியடிகள் முன்னுரையில் எழுதியுள்ளார். பகவத்கீதையின் மொழிபெயர்ப்பு பாரதியின் படைப்புகளில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது என்றால் மிகையன்று.

பாஞ்சாலி சபதம்

''காரியம் மிகப்பெரிது; எனது திறமை சிறிது 'ஆசையால்' இதனை எழுதி வெளியிடுகின்றேன். பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழிகாட்டியாக'' எனத் தொடங்குகின்றார் பாரதி. இம்மொழி பெயர்ப்பைப் போல பல நூல்கள் தேசிய மொழிகளில் வெளிவர வேண்டும் என விரும்புகின்றார். பாஞ்சாலிசபத மொழிபெயர்ப்பைப் பற்றி ''எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதிவிடலாம் - அதாவது 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்த சரக்கு' அதிகமில்லை. தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி'' என்கிறார்.

பதஞ்சலி யோக சூத்திரம்

வடமொழியில் உள்ள பதஞ்சலி யோக சூத்திரத்தைத் தமிழில் மொழிபெயர்த்து தொடர்ச்சியாக 'கர்மயோகியில்' வெளியிட்டு

வந்தார். இம்மொழிபெயர்ப்பு பின்னர், 'பதஞ்சலியோக சூத்திரம்' எனும் நூலாக வெளிவந்தது. பதஞ்சலியோக சூத்திரங்களின் முதற்பாகம் ஸமாதிபாதம். அஃது ஐம்பத்தொரு சூத்திரங்களைக் கொண்டது. அவற்றில் ஐம்பது சூத்திரங்களை மொழிபெயர்த்து விளக்கவுரையும் எழுதியுள்ளார்.

வந்தேமாதரம்

பங்கிம்சந்திர சட்டோபாத்தியாவின் வங்காள மொழிப் பாடல் தான் 'வந்தே மாதரம்'. 'ஜாதிய கீதம்' எனும் தலைப்பிட்டு முதன்முதலில் ஆயிரத்துத் தொளாயிரத்து ஒன்பதில் 'ஜன்மபூமி' எனும் நூலில் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். ஆயிரத்துத் தொளாயிரத்து பத்தாம் ஆண்டு நவம்பரில் 'மாதா வாசகம்' எனும் நூலில் ஜாதியகீதம் புதிய - மொழிபெயர்ப்பை- வெளியிட்டார். இரண்டாம் மொழிபெயர்ப்பைப் பற்றி "முன் னொருமுறை முழுவதும் அகவலாக ஒரு மொழிபெயர்ப்பு எழுதி யிருந்தேன். ஆனால், அது பாடுவதற்கு நயப்படாதாகையால், இப்பொழுது பல சந்தங்கள் தழுவி மொழிபெயர்க்கப்பட்டிருக் கின்றது" என்கிறார்.

வந்தேமாதரம் மொழிபெயர்ப்பு ஏன்? என்பதற்கு "வந்தே மாதரம் என்ற திவ்யகீதத்தை நான்மொழிபெயர்க்கத் துணிந்தமை, கர்வங்கொண்ட செய்கையென்று பலர் கருதக்கூடும். மேற்படி கீதமெழுதிய பெங்காளி வித்வானாகிய பங்கிம் சந்திரபாபுவின் தைவிகச் சொற்களைத் தமிழ்ப்படுத்த எனக்குப் போதிய வன்மை யில்லாவிடினும் தமிழ்நாட்டாருக்கு அச்செய்யுளின் பொருளுணர்த்த வேண்டுமென்ற ஆசைப் பெருக்காலேயே யான் இதனைத் துணிந் திருக்கிறேன்" என்று இருபத்தெட்டு திசம்பர் ஆயிரத்துத் தொளா யிரத்து ஐந்தில் எழுதிய 'ஏன்' எனும் கட்டுரையில் குறிப்பிட் டுள்ளார்.

மொழிபெயர்த்தது பற்றி "பலரால் இக்கீதத்திற்கு எழுதப் பட்டிருக்கும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பானது பெங்காளி கீதத் திலிருந்து சில இடங்களில் மாறுபடுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்னால் கூடிய அளவு பெங்காளிச் சொற்களை அநுசரித்தே தமிழ் மொழிபெயர்ப்பு எழுதியிருக்கிறேன்" எனக் குறிப்பிடுகின்றார். இக்கூற்றின்வழி பாரதிக்கு வங்க மொழியறிவு உண்டு என்பதை அறியமுடிகின்றது. மேலும் மொழிபெயர்க்கும் பொழுது மூல நூலை முழுவதுமாகப் பின்பற்றியே மொழிபெயர்க்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றார், பாரதி.

தாண்டவ முதலியார் மொழிபெயர்ப்பு

தாண்டவ முதலியார், வடமொழியிலுள்ள 'பஞ்சதந்திரம்' எனும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். இம்மொழிபெயர்ப்புப் பற்றி,

> "ஹிந்துக்களின் அறிவு நுட்பத்துக்குப் பெரும் புகழுமாகி விளங்கும் ஸம்ஸ்கிருத பஞ்சதந்திரம் தமிழில் இயற்கையாக மொழிபெயர்க்கப்படவில்லை. அதன் அழகான நீதி வசனங்களில் பெரும்பான்மை தமிழ்மொழிபெயர்ப்பிலேயில்லை"

என்கிறார், மேலும் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தொன்று ஜனவரி பதினொன்றாம் நாள் சுதேசமித்திரனில்,

> " பஞ்சதந்திரம், வடமொழியிலுள்ள மூல நூலுக்கு நேரான தமிழ் மொழியெர்ப்பு இதுவரை யாவராலும் செய்யப் படவில்லை யென்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்"

என ஒரு வாசகரின் கேள்விக்குப் பதில் அளிக்கிறார். இருப்பினும்

> "தமிழ் நாட்டில் புதியதோர் அறிவுக்கிளர்ச்சி எழுச்சி கொண்டு இருப்பதினின்றும், இனி விரைவிலே அந்நூல் தமிழில் நேராக மொழிபெயர்க்கப்படுமென்பது நிச்சயந் தான்"

என்றும் குறிப்பிடுகின்றார்.

மொழிபெயர்ப்பில் வாக்கியங்களின் அமைப்பை மாற்றி எழுதலாம். பண்பாட்டின் தாக்கத்தை ஒட்டியும் சில மாற்றங்களைச் செய்யலாம். ஆனால் மூலநூலில் சொல்லப்பட்ட கருத்துக்களை விட்டுவிடக் கூடாது. இந்நிலையை பாரதியார் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றார். மேலும் நல்ல மொழிமெயர்ப்புகள் விரைவில் வரும் என்பதையும் குறிப்பிடுகின்றார்.

எனவே இவற்றினின்றும் 'பஞ்ச தந்திரம்' மொழிபெயர்ப்பில் தன்னை ஈடுபடுத்த முயன்றார் என்பது தெரிகிறது. ஆயின் அம் முயற்சி பற்றிய செய்திகள் அறியப்படவில்லை.

பிரெஞ்சு தேசிய கீதம்:

பிரெஞ்சு தேசிய கீதமான "லா மார்ஸெலேஸ்" என்பதைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்தார். இது சிறுவர்கள் நடாத்திய ஒரு தமிழ் நாடகத்தில் இடம் பெற்றதாகும். தமிழ் நாடகத்தில் பாடல் பாடுவதைவிட அதை தமிழில் பாடினால் எல்லோருக்கும் பயன் என்று எண்ணிச் செய்தார்

"அன்னை நன்னாட்டில் மக்காள் ஏகுவம்
மன்னு புகழ் நாளிதுவே

நம்மேல் கொடுங்கோல் செலுத்துவோர்
நாட்டினர் உத்திரக் கொடிதனை''

இப்பாடலைக் கேட்குமிடத்து மிகவும் உணர்ச்சி வசப்படுவதாகவும் கூறுகின்றார்.

ஜப்பானியக் கவிதை:

மாடர்ன் ரிவ்யூ'வில் 'நோகுச்சி' எனும் ஜப்பானியக் கவிஞர் எழுதிய லிகிதத்தை தம்முடைய கடிதத்தில் மொழிபெயர்த்துள்ளார். இதில் அமெரிக்க பெண் கவிஞர் 'மிஸ் ரீஸ்' -Miss L. W. Reese- எழுதிய கவிதையும், 'பூலோன்யோஸோ ஹோ' எனும் ஜப்பானியக் கவிஞரின் பாடலும், வாஷோ மத்ஸுவோ -Basho Matsuso- எனும் ஜப்பானியக் கவிஞருக்கு 'ஹொகூஷி' எனும் ஜப்பானியக் கவி எழுதிய

''தீப்பட்டெரிந்தது
விழு மலரின் — அமைதியென்னே!''

எனும் பாடலும் இதில் அடங்கும். இக்கட்டுரையின் வாயிலாக 'சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்' ஜப்பானியக் கவிதையின் சிறப்பைக் காட்ட விரும்புகிறார், பாரதி. பாரதியின் எண்ணங்கள் தேசியம், சமுதாய மறுமலர்ச்சியை காட்டவல்லன. எழுச்சிப் பாடல்களுக்கு ஆர்வம் காட்டியவர்களில் பாரதியும் ஒருவர். ஜப்பானிய 'ஹைகூ' பாடல்களில் அதிகம் ஆர்வம் காட்டிய காரணமே ஜப்பானியக் கவிதைகளைப் பற்றி எழுத மொழிபெயர்க்கக் காரணம் எனலாம்.

பெல்ஜியக் கவிஞர்:

புரட்சியும், புதுமையும் சிந்தனை ஊற்றாய் கொண்ட பாரதி கவிதையில் புதுச்சிந்தனைகளைப் புகுத்துவதில் நாட்டம் கொண்டார். புது உத்திகள் எங்கு இருப்பினும் பாராட்டும் பாங்கு அவருடைய கட்டுரைகளில் காணமுடியும். பெல்ஜியக் கவிஞர் எமில் வெர்ஹெரன் தன்னுடைய கவிதைகளில் சில புது உத்திகளைக் கையாண்டுள்ளதை கண்ணுற்றார் பாரதி. வானம், காற்று, நீர், மலை, பெண், தெய்வம் போன்றவை மட்டுமே அழகுணர்ச்சியைக் காட்டவல்லன எனும் கருத்து நிறைந்த காலத்தில் எமிலுடைய கவிதை சற்று மாறுபட்டு இருக்கக்கண்டார். எமிலுடைய கவிதைகளில் இயந்திர ஆலைகள், மோட்டார் வண்டிகள் போன்ற வஸ்துக்களைச் சேர்த்துப் பாடல்களை இயற்றினார். நல்லதைக் கண்டால் அதை நாட்டிற்குச் சொல்ல வேண்டும் எனும் பண்புடைய பாரதி,

''வலிமையே அழகு, ஒரு பொருளின்
வெளியுருவத்தைப் பார்த்து அழகா

இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது,
யந்திரங்களிலே வலிமை நிகழ்கின்றது
ஆதலால் அவை அழகுடையன அவற்றைக்
கவி புகழ்ச்சி செய்தல் தகும்''

எனும் எமிலுடைய உரையை 'பெல்ஜியக் கவிஞர்' (29 மார்ச் 1916) எனும் கட்டுரையில் மொழி பெயர்த்துக் கொடுக்கின்றார்.

சீனத்துக் கவிதை:

'சியூ சின்' என்ற சீனத்துப் பெண்மணியின் கதையை மொழி பெயர்த்தார். 'லயோநெல் கிப்ஸீ' என்பார் எழுதிய ஆங்கில நூல்வழி இதனை மொழிபெயர்த்துள்ளார். இதிலுள்ள கவிதைகள் அந்நூலின் இடையிடையே உள்ளனவாகும். பாரதியார். சீனமொழிக் கவிதையை

''சியூ யூசி யூதெங்
சவிஷா ஜென்''

என எழுத்துப் பெயர்ப்பு செய்து கொடுக்கின்றார். பின்னர் அதனை

''மாரி காட் காற்றும்
மாரி நாள் மழையும்
மார் புண்ணாக வருந்துகின்றனவே''

என மொழிபெயர்த்துக் கொடுக்கின்றார்.

''விடுதலைக்கு மகளி ரெல்லோரும்
வேட்கை கொண்டனர், வெல்லுவ மென்றே...''

எனச் சியூசின் பாடலை ''பெண் விடுதலை'' எனும் தலைப்பில் கொடுத்துள்ளார்.

ஜான்ஸ்கரின் கவிதை:

''ஜான்ஸ்கர் எனும் ஆங்கிலக் கவிஞர் 'நட்சத்திர தூதன்' என்ற பத்திரிகையில் பிரசுரித்த -'The Town of Let's Pretend- ஆங்கிலக் கவிதையைக் 'கற்பனையூர்' என்று மொழிபெயர்த்துள் ளார்.

மாட்ராஸ்லஸ்டன்
ஷர்மன் கவிதை:

மா. ரா. ஷர்மன் எனும் ஆங்கிலப் பெண்மணி எழுதிய கவிதையைத் தமிழில் மொழி பெயர்த்து 'இந்திய அழைப்பு' -19 சூலை, 1921- எனும் பகுதியில்

''அன்பிற் கினிய இந்தியா! அகில
மதங்கள், நாடுகள், மாந்தருக் கெல்லாம்

... ...

எம்முன்வந்து நீதியின் இயலைச்
செம்மையுற விளங்குமொரு சேவகன்
அருளுக நீ''

என்ற பாடலையும்,

''கேள்! விடை கூறினாள் மாதா! நம்மிடை யாவனோ
தோன்றினன்? இவன் யார்?''

....

எனத் தொடங்கும் பாடலை 'உத்திரம்' எனும் தலைப்பிலும் மொழிபெயர்த்துள்ளார்.

1 தாகூரின் 'பஞ்சவியாசங்கள்' பாரதியால் மொழிபெயர்க்கப் பெற்றன. அவை 'மாடர்ன் ரெவியூவில்' வெளியிடப்பட்டன. அவை

(அ) ஜப்பானுடைய ஆவி
-The spirit of Japan-
ஆண்டு ஆயிரத்துத் தொளாயிரத்து பதினேழு ஜூன்

(ஆ) ஜாதி -The Nation-
ஆண்டு ஆயிரத்துத் தொளாயிரத்து பதினேழு ஜூலை.

(இ) அடங்கி நட
-Thou shalt obey-
ஆண்டு ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழு செப்டம்பர்

கட்டுரை

மொழிபெயர்ப்பு பற்றி பாரதி:

''இதில் ஆசிரியர் ஜனப் பிரிவுகளை 'ஜனம்' 'ஜாதி' என இரண்டு வகையாக நோக்குகிறார். நிலம், பாஷை முதலிய வற்றால் ஏற்படும் இயற்கைப் பிரிவுக்கு 'ஜனம்' என்ற பெயர் சொல்லுகிறார். அதற்குத் 'திருஷ்டாந்தம்' ஆரிய ஜனம், நீகிரோவஜனம். ராஜபேதத்தால் கற்பிக்கப்படும் பிரிவுக்கு ஜாதி என்று பெயர் சொல்லுகிறார். திருஷ்டாந்தம் ருஷியஜாதி, ஜெர்மன் ஜாதி. இந்த விசேஷப் பொருளை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு படிக்கவேண்டும்'' என்று 'ஜாதி' எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மொழிபெயர்ப்பாளர் குறிப்பு என்பது மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்றாகும். படிப்போர் புரிந்துக் கொள்ள உதவியாக அமைவது அக் குறிப்புகளே. இதனைப் பாரதி அழகாகச் செய்து காட்டியுள்ளார். பல கட்டுரைகளிலும் மொழிபெயர்ப்புக் குறிப்புகளைத் தந்துள்ளார். இது ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளரின் படைப்புக்கு எடுத்துக்காட்டாகும்.

தாகூரின்
மொழிபெயர்ப்பு பற்றி பாரதி:

கவி ரவீந்திரநாத் தாகூரின் புகழ் உலகெங்கும் பரவியது. இவருடைய தனித்துவமிக்க படைப்புகள், சொற்பொழிவுகள் மக்களை மிகவும் கவர்ந்தது. கவிதை, கதை, கட்டுரை-போன்ற வற்றை எழுதினார். தாகூர் தான் எழுதிய 'கவிதாஞ்சலி' எனும் நூலை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தார். இதுவே அவர் புகழ் பெற காரணமாய் அமைந்தது எனலாம். இதனைப் பாரதி,

> 'இத்தனைக்கும் இவர் பாடிய பாட்டுகளோ வங்கப் பாஷையிலே உள்ளன. வெறும் மொழிபெயர்ப்புக்களை மட்டும்தான் உலகம் பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்த கீர்த்தி''

என்று ''ஸ்ரீரவீந்தர் திக்விஜயம்'' (இருபத்தைந்து ஆகஸ்ட் ஆயித்துத் தொளாபிரத்து இருபத்தொன்று) எனும் கட்டுரையில் எழுதுகின்றார். இவருடைய புகழ் இவர் மொழிபெயர்ப்புக்கு என்றால் இவருடைய மற்ற பாடல்களை எவ்வாறு புகழ்வது? எனக் குறிப்பிடுகின்றார். மொழிபெயர்ப்பின் தேவையையும் புலப் படுத்துகின்றார்.

பாரதி
மொழிபெயர்ப்பு:

பாரதி மொழிபெயர்த்தவற்றில் பாரதியின் படைப்புகளும் அடங்கும். பாரதியின் 'பாரதிமொழிபெயர்ப்பு'?அவர் பெற்றிருந்த ஆங்கில மொழியின் அறிவு, ஆழம் ஆகியவற்றை நன்கு வெளிப் படுத்துகின்றன இவருடைய மொழிபெயர்ப்புப் பற்றி,

> ''பாரதியாரே பாரதியை மொழிபெயர்க்கும்போது
> சர்க்கரைப் பந்தலில் தேன் மாரிதான்''[10]

என்று பிரேமாநந்தகுமார் குறிப்பிடுகின்றார். மேலும் ''பாரதியார் சுயமாக எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளில் அரவிந்தரது உன்னத பான சொற்கோவைகளின் வடிவைக் காணலாம்,'' என்பர். ''வேடிக்கையும், விசையும் இல்லை. அங்கு அவர் தமிழர்களிடம் பேசவில்லை. மேலும் அந்நிய பாஷையில் வேடிக்கை செய்யப் போனால் வினையான நடை உருவாகும் என்று எண்ணியிருக்க லாம்'' என்று இவருடைய ஆங்கிலப் படைப்புகளைத் திறனாய்வு செய்கின்றார் பிரேமா நந்தகுமார். அரவிந்தர் நூல்தொகுப்பில் உள்ள திருக்குறள் கடவுள் வாழ்த்து, ஆண்டாள், நம்மாழ்வார் கவிதைகள் பாரதியாரின் துணையுடன் மொழிபெயர்க்கப்பட்டன என்றாலும் பாரதியின் மொழிபெயர்ப்பாகவே''( )எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

பொன் மொழிகள்:

பாரதியின் மொழிபெயர்ப்புகளில் ஐம்பது (50) பொன்மொழிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றை 'வசனம்' எனக் குறிப்பிடுகின்றார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து பதினேழில் (5. மார்ச்சு) 'தொழில்' எனும் தலைப்பின் கீழ் ஒன்பது பொன்மொழிகளைக் கொடுக்கின்றார்.

உண்மை எனும் கட்டுரையில் 'களஞ்சியம்' எனக் கூறுகின்றார். அத்தொகுப்பிற்கு 'ரத்தினக்களஞ்சியம்' எனப் பெயர் சூட்டுகின்றார். இதில் எட்டுக் கருத்துக்கள் இடம் பெறுகின்றன,

'ரத்தினமாலை' எனும் தொகுப்பில் பால் ரிச்சர்டு' எனும் பிரான்ஸ்-நாட்டவர் தொகுத்த பொன்மொழிகளை மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். இதில் இருபத்தொரு பொன்மொழிகள் உள்ளன.

'உடம்பைப் பேணுதல்' எனும் முறை பற்றிய கருத்துக்ளைத் தொகுத்துள்ளார். அதில் ஏழு கருத்துரைகளும்; 'தர்க்கம்' எனும் தொகுப்பில் ஐந்து கருத்துரைகளும் இடம் பெற்றுள்ளன.

உலகப் பெரியோர்களின் கருத்துக்களையும், சமய தத்துவ ஞானிகளின் உரைகளையும் கொடுத்துள்ளார். தான் படித்து மகிழ்ந்த-ரசித்த-சிந்தித்த பகுதிகளை மக்களிடையே கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தால் இத்தொகுப்பை அளித்தார் எனலாம். இதில் பழமொழி உலக சமயங்களின் கருத்துக்கள், உலகப்பெரியோர்களின் உரைகள் அடங்கும்.

(அ) 'ரத்தினமாலை' எனும் தொகுப்பில் இரண்டு பழமொழிகள் இடம்பெறுகின்றன. அவற்றில் ஒன்று 'பாரசீகப் பழமொழி' மற்றொன்று பைபிள் பழமொழியாகும்.

(ஆ) ரத்தினமாலையில் பைபிள் வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பிலிப்பியர் மத்தேயு. லூக், கொரிந்தியர் போன்றவையும், 'தர்க்கம்' எனும் பகுதியில் ஒரு குறிப்பும் இடம் பெற்றுள்ளன.

(இ) 'தொழில்' எனும் கட்டுரையில் ''உத்தமஸ்தோய்'' எனும் பௌத்த நூலிலிருந்தும், 'மஹாலக்கம்' எனும் பௌத்த நூலின் வசனம் ''உடம்பைப் பேணுதல்'' எனும் பகுதியிலும் இடம் பெறுகின்றன.

(ஈ) கன்பூஷியஸ் மதத்தின் சாரங்களில் இரு பகுதியை 'ரத்தினமாலை' எனும் பகுதியில் கொடுத்துள்ளார்.

(உ) ராமகிருஷ்ண பரமஹம்சரின் உரைகளில் இரண்டினை ரத்தினமாலையிலும் மற்றும் உடம்பைப் பேணுதலிலும் தர்க்கத்திலும் கொடுத்துள்ளார். ரத்தினக் களஞ்சியம் எனும் பகுதியில் ஒன்றும் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

(ஊ) விவேகானந்தரின் உரைகள் 'உண்மை' எனும் கட்டுரையிலும், உடம்பைப் பேணுதல் எனும் பகுதி யிலும் கொடுத்துள்ளார்.

(எ) உலகப் பெரியோர் கருத்துரைகள் எனும் நிலையில் 25-க்கும் மேற்பட்ட பொன்மொழிகளைக் கொடுத் துள்ளார். இதில் பல்வேறு நாட்டைச்சார்ந்த ஞானி களின் கருத்துக்களைக் கொடுத்துள்ளார்.

கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்:

பாரதியின் புகழ்பரப்பக் காரணமாய் அமைந்தவற்றுள் ஒன்று அவருடைய கட்டுரைகளாகும், அவ்வப்போது பலகட்டுரைகளை எழுதினார். அவற்றில் பல மொழிபெயர்ப்புகளாகும். பொதுவாக கட்டுரைகளில் அதிகம் சொற்பொழிவுகளாகவே இருக்கின்றன. கேட்டதையும் படித்ததையும் பாரதி மொழிபெயர்த்தார் எனலாம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஏழில் திலகர் புதிய கட்சியைத் தொடங்கி வைத்து அங்குப் பேசியவற்றை ''புதிய கட்சியின் கோட்பாடுகள்'' எனும் தலைப்பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டார்.

'நாற்குலம்' எனும் பகுதியில் ''சாதுர்வர்ண்யம்'' எனும் தலைப்பில் கான்பூரில் திலகர் நிகழ்த்திய சொற்பொழிவை மொழி பெயர்த்தார்.

'புதிய உயிர்' (ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாறு மார்ச்சு பதினேழு) எனும் கட்டுரையில் 'ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்' எனும் ஆங்கிலேயர் எழுதிய கல்வி நூலைப்பற்றியும் அதிலுள்ள கருத்துக் களையும் தமிழில் கொடுத்துள்ளார்.

லண்டன் 'டைம்ஸ்' பத்திரிக்கையில் ஸர் வாலன் டைன் கிரால் என்பவர் எழுதிய கட்டுரையின் சில பகுதியை மொழி பெயர்த்து ''இதன் பெயரென்ன?'' எனும் தலைப்பில் கட்டுரை யாக அமைத்துள்ளார்.

பிரான்ஸ் தேசத்து முதல் மந்திரி ஸ்ரீமான் 'க்ளெமன்ஸோ' பம்பாயில் ஆற்றிய உரையின் சில பகுதி 'நாகரிகத்தின் ஊற்று' எனும் கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

ஜகதீஸ் சந்திரபோஸ் எழுதிய கட்டுரையை 'ஜீவவாக்கு என்ற தலைப்பில் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டில் எழுதி யுள்ளார்.

பல அறிஞர்களின் உரைகள்—கருத்துகளைக் கட்டுரையில் சுட்டிக்காட்டி எழுதும் பாணியைப் பாரதி கொண்டிருந்தார். பல கட்டுரையில் இதனைக் காணலாம். அவ்வாறு எழுதும் கட்டுரை களில் சமகாலச் செய்திகளையும் சான்றோர்களையும் இணைத்து எழுதும் ஆற்றல் பெற்றவர் பாரதியாவார்.

கடிதங்கள்:

கடிதம்-ஒருவருடைய அறிவுப் பெருக்கம் மனப்பக்குவம், பல துறை அனுபவங்கள், தொடர்கின்ற பணி ஆகிவற்றைப் பரக்கக் காணலாம். ''பொதுவாகக் கடிதங்கள், ஒருவருடைய உள்ளத்தில் அவ்வப்பொழுது ஏற்படக்கூடிய உணர்ச்சிகள், எண்ணங்கள் முதலியவற்றைப் பிரதிபலித்துக் காட்டக்கூடிய கண்ணாடிகள் இருவருடைய உள்ளங்களை இணைத்து வைக்கும் பாலங்கள். செயலில் இறங்கத் துணிந்துவிட்டவர்களின் மனத்தில் உருவாகி யிருக்கும் திட்டங்களை ஒருவாறு அறிவிக்கும் முன்னோடிகள்'' என்பர்.11

பாரதியின் மொழிபெயர்ப்புக்களில் கடிதங்கள் இடம் பெறு கின்றன. அவை அவ்வப்பொழுது கட்டுரைகளிடையே இணைத் துக் கொடுத்துள்ளார். நல்லவற்றை நாட்டு மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் ஆக்கமே இதன் காரணமாகும்.

மொழிபெயர்க்கப்பட்ட கடிதங்களில் விவேகானந்தர், கவி தாகூர் போன்றோர் எழுதிய கடிதங்களே அதிகம் காணப்படு கின்றன.

விவேகானந்தர் [இருபத்திரண்டு—ஆறு—ஆயிரத்து எண்ணூற்று தொன்னூற்று இரண்டில்] சிகாகோவிலிருந்து ஹரிபாதர் என்பவ ருக்கு எழுதப்பட்ட கடிதம் மொழிபெயர்க்கப்பட்டது. அது அமெரிக்க—இந்திய பெண்களை ஒப்பிட்டு எழுதிய கடிதமாகும்.

ஒன்பது—ஏழு—ஆயிரத்து எண்ணூற்றுத் தொன்னூற்றெட்டில் அல்மோரா எனும் இடத்திலிருந்து வெளிநாட்டுப் பெண் ஒருத்திக்கு விவேகானந்தர் எழுதிய கடிதமாகும்.

இங்கிலாந்திலுள்ள 'நியூ ஸ்டேட்ஸ்மென்' என்ற பத்திரிக்கையில் வந்த கடிதம் ஒன்றை 'குடிப்பாங்கு' (இரண்டு—பிப்ரவரி—ஆயிரத்துத் தொளாயிரத்து பதினேழு) எனும் கட்டுரையில் மொழி பெயர்த்துக் கொடுத்துள்ளார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தொன்று ஜூன் இருபத்தாறாம் நாள் இலண்டன் அப்சர்வர் எனும் பத்திரிகையில் வெளி வந்த கடிதத்தை "ஆஸ்த்திரியாவில்" எனும் தலைப்பில் எழுதியுள்ளார். இதில் தாகூரின் புகழ் சொல்லப்பட்டுள்ளது. இக்கடிதத்தை இரு பகுதியாக இரண்டு இடங்களில் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார்.

பேட்டிகள் :

விவேகானந்தரின் மேல் அதிக பற்றும் மதிப்பும் வைத்திருந்தார் பாரதி. விவேகானந்தரின் உரைகளை அவ்வப்போது தமிழ் மொழியில் எழுதிக்கொண்டு இருந்தார். பாரதி மொழிபெயர்த்தவற்றில் 'பேட்டியும்' இடம்பெற்றுள்ளது. ஆயிரத்து எண்ணூற்று தொன்னூற்று எட்டில் 'பிரபுத்த பாரதம்' இதழில் வெளியான விவேகானந்தரின் பேட்டியின் சில பகுதிகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ஸ்ரீவாடியா என்பர் 'ஒழுக்கம்' எனும் கட்டுரையை 'ஹிந்துஸ்தான் ரெவ்யூவில்' எழுதியுள்ளார். அதில் 'பிரபுத்த பாரதம்' பகுதியில்

> "பத்திரிக்கையாளர் : வேதத்திலும் ஸந்யாஸம் கூறப்பட்டுள்ளதன்றோ ? விவேகானந்தர் : ஸந்தேஹமில்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது."

எனும் பகுதியைக் கொடுக்கின்றார். பொதுவாகப் பாரதியார் தன்னுடைய கருத்தை வெளியிட முனையும்பொழுதெல்லாம் அக் கருத்திற்கு வலுவூட்டும் செய்திகளைச் சேர்க்கின்றார். அவை பொதுவாக பெரியோர்களின் உரையாகவே உள்ளது. அதிலும் சமகாலத்தவர்களுடைய உரைகளை அங்கும் இங்கும் இணைத்துக் கொள்கின்றார் எனலாம். பாரதியின் ஒவ்வொரு எழுத்துக்களும் படிப்பவருடைய சிந்தனையைத் தூண்டும்படியாக அமைப்பதில் வெற்றி பெறுகின்றார் என்றால் மிகையாகாது.

சில எண்ணங்கள் :

(அ) பாரதியின் மொழிபெயர்ப்புக்கள் தேசிய நலன் கருதியே அமைந்துள்ளன எனலாம்.

(ஆ) வடமொழி சாஸ்திரங்களின் மீது அதிகப் பற்றுடையவர் என்பதை இவருடைய மொழிபெயர்ப்புகள் காட்டு கின்றன எனலாம்.

(இ) மொழிபெயர்ப்பில் கருத்திற்கு முதலிடம் கொடுக்கின்றார்.

(ஈ) மொழிபெயர்ப்பின் தேவையை பாரதி சுட்டிக்காட்டுகின்றார்.

(உ) கதை, நாவல் போன்ற மொழிபெயர்ப்புகளில் அதிகம் நாட்டம்காண முடியவில்லை.

அடிக்குறிப்புகள்:

1) வா. இராமசாமி, மகாகவி பாரதியார் பக். 32.
2) பாரதியார் கட்டுரைகள் 'தமிழ்' (3 ஏப்பிரல் 1916).
3) பாரதியார் கட்டுரைகள், பாரதி பிரசுராலயம், பக். 167
4) ஷை பக் 118
5) பாரதி நூல்கள்–கட்டுரைகள், பாரதி பிரசுராலயம், 1950, பக். 410.
9) மகாகவி பாரதியாரின் கட்டுரைகள், வானதி பதிப்பகம், பக். 193
7) ஷை பக். 312
8) பாரதியும் கவிதையும், தங்கம்மாள் பாரதி, 1947, பக். 93
9] ஷை பக். 1
10) பாரதியார், பிரேமா நந்தகுமார், சாகித்திய அகாடமி, 1982, பக். 52.
11) பாரதியாரின் கடிதங்கள், ரா. அ. பத்மநாபன் (தொ) வானதி பதிப்பகம், 1982

பயன்பட்ட நூல்கள்:

1) மகாகவி பாரதி நூற்பெயர்க்கோவை, சீனி விசுவநாதன், வானவில் பிரசுரம், சென்னை-1981
2) பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம் இரண்டாம் பதிப்பு, 1978
3) மகாகவி பாரதியாரின் கட்டுரைகள், வானதி பதிப்பகம், 1982
4) பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை, பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம், 1978
5) Agni and other poems and Translations and Essays and the prose fragments. Bharathi. 1977.

—★—

புலங் காணாப்
—: புதுக் கல்வெட்டுக்கள் :—

பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்.,

புலங் காணாப்
புதுக் கல்வெட்டுக்கள்

என்ற இத்தொடரில், இதுவரை கண்டுபிடிக்கப் படாமலும், வெளியிடப்படாமலும் உள்ள கல் வெட்டுக்கள் வெளியிடப்படுகின்றன. எனது கள ஆய்வுகளின்போது என்னால் கண்டுபிடிக் கப் பட்டு, உரிய விளக்கங்களுடன் இவைகள் உலகிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவற்றுள்:

(1) கரந்தைச் சத்திரக் கல்வெட்டு:

தஞ்சை நகரத்தின் வடபுறப் பகுதி கரந்தையாகும். கரந்தை யின் மேற்குப் புறத்தில் தஞ்சை—திருவையாறு பழஞ்சாலையில் வட வாற்றின் வடகரையில் உள்ள ஒரு தென்னந்தோப்பில் இக்கல் வெட்டுத் துண்டு கிடக்கிறது.[1] இரண்டரை அடி அகலம் மூன்று அடி நீளம் உள்ள இக்கல் துண்டில் பழந்தமிழ் கல்வெட்டுக் காணப் படுகிறது. கூடுதல் வரிகள் பதினான்கு. கல்வெட்டின் எழுத்து நிலை பதினேழாம் நூற்றாண்டுப் பழமையது. தொடர்கள் முழுமை யானவை அல்ல. தொடக்கவரி இல்லை. ஆண்டுக் குறியீட்டில் தமிழ் எண்களைக் காண முடிகின்றது.[2] பதினேழாம் நூற்றாண் டின் வழக்குச்சொல் நடையிலேயே இக்கல்வெட்டு அமைந்துள்ளது. கல்வெட்டுப் பொறிப்பு நேரியது. ஒற்றுப்படி எடுப்பதற்கு விழுமி யது.

கல்வெட்டுச் செய்தி:

வழிச் செல்வோர் தங்கற்கான சத்திரம் ஒன்று அமைக்கப் பட்டதைப் பேசுகிறது. கரந்தையில் அமைந்த அச்சத்திரம் இன்றும் உள்ளது. அச்சத்திரத்தை அடுத்த தென்னந்தோப்பில் தான் இக்கல்வெட்டுத்துண்டு சிதைவுற்று கிடக்கிறது. இச்சத்திரம் இன்று வரதப்பய்யர் சத்திரம் என வழங்கி வருகிறது.

கோயில்
கோட்டக் கல்துண்டு,
சிதைந்த கல்வெட்டு:

1. ம் கூடுராடுயிள இ தினமேல் செ ...
2. ரணிபுசுத்த திற யோதெசியூ திருவெ...
3. பெநத ஆதிவாரமும் பெறத்திந சுத்தியில்...
4. பட்டணத்தில் யிருக்கும் சயனாராயண...
5. ராமகன் அச்சுதப்ப செட்டியார் திருச்சி...
6. நிரிதி தெசையில் காசிராமேசுரத்துக்கு...
7. யில் அரியாறுக்கு வடக்குதன்ம சத்திரம் யிடுகை...
8. ருமலை னாயகராய்யனவர்கள் உபயமாக...
9. விராலி மலைக்கு வடக்கு மேற்பது குடியும்...
10. ப்படியினாலே தண்டு கிட்டி நப்பனாயகார்...
11. ரு பங்குமதார்ம தெத்தமாக விட்டபடியினாலே...
12. த்தரவரையும் நடக்கவும் யிநத்தன் மதுக்கு அகிதம்...
13. ரையில் மாதா பிதாவை கொண்ண தோசத்தில்...
14. வ தையியும் பண்ணிந பாவத்தில் போவான்.உ

[கி. பி. ஆயிரத்து அறுநூற்று முப்பத்தாறாம் ஆண்டு = ஸ்ரீ ஆதீஸ்வரஸ்வாமி கோயிலின் பின்புறம் வடமேற்கு மூலையில் உள்ள சத்திரத்திற்கான கல்வெட்டு, அச்சுதப்பசெட்டியார் அவர்களால் எடுப்பிக்கப்பட்ட சத்திரம் இது என்கிறது.]

கல்வெட்டின் காலத்தை முதல்வரியில் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தேழு என்று காணப்படும் குறியீட்டால் அறியலாகும்.[3] காசி ராமேசுரம் செல்லும் வழியிடையில் தஞ்சையில் வடவாற்றிற்கு வடக்குக் கரையில் கி.பி. ஆயிரத்து ஆறுநூற்று முப்பத்தாறில் ஒரு தருமசத்திரம் அமைக்கப் பட்டிருக்கிறது.[4] இக்காலத்தில் தமிழகத்தின் பெரும் பகுதியை ஆண்டு வந்த மன்னன் திருமலை மன்னனாவான்.[5] திருமலை நாயக்கரது பதின்மூன்றாவது ஆட்சியாண்டாகிய இவ்வாண்டில் திருமலை நாயக்கர் பெயரால்'பட்டணம்' என்று கல்வெட்டுச் சுட்டிடும் ஊரில் வாழ்ந்து வந்த சயநாராயணர் மகன் அச்சுதப்ப செட்டியார் இவ்வறம் புரிந்தவர் ஆவார்.[6] திருமலை நாயக்கர் ஊக்கிவந்த இத்தருமச் செயல் சீருற நடந்திடும் வகைக்கு திருமலை நாயக்கரது தானைத் தலைவன் கிருஷ்ணப்ப நாயக்கன் அறக்கொடை வழங்கியுள்ளான்[7] அவ்வறக்கொடை விராலி மலைக்கு வடக்கே முப்பது குடியளவு தானம் செய்து கொடுக்கப்பட்ட நிலமாதல் வேண்டும்[8] அதனாற் பெற்ற வருவாயில் இச்சத்திரம் தொடர்ந்து மக்கட்பணி ஆற்றியிருத்தல் வேண்டும்.

ஆயிரத்து அறுநூற்று முப்பத்தாறாம் ஆண்டு திரயோதசியும் ஆதிவாரமும் பொருந்திய சுபதினத்தில் இவ்வறக்கொடை நிகழ்த் தப் பெற்றிருக்கிறது.[9] ஆயின் மாதம் பற்றிய குறிப்பு கிடைத் திலது.

கல்வெட்டின் பட்டணத்தில் இருக்கும் சயனாராயணன் மகன் அச்சுதப்ப செட்டியார் இவ்வறச் செயலை நிகழ்த்தியபோது அவரது தகப்பனார் சயனாராயணனும் இருந்திருக்க வேண்டும் என்ற குறிப்பும்பெறப்படுகிறது. இவர்களது ஊரெனக் குறிக்கப்படு கின்ற பட்டணம் என்பது எது?[10]

நாயக்கராட்சியின் முற்பகுதியில் திருச்சியே தலைநகராக விளங்கியுள்ளது.[11] திருமலை நாயக்கரது ஆட்சியின் முற்பகுதியும் திருச்சியைத் தலைநகராகக் கொண்டே நடந்தேறியுள்ளது. பிற் பகுதியில்தான் மதுரை தலைநகராகியுள்ளது.[12] திருச்சியை ஒட்டிய புறநகர்ப் பகுதி சீரங்கம் ஆகும். அதனைச் சீரங்கப் பட்டணம் என்பது பண்டை வழக்கு.

அக்காலத்தில் மைசூர் அரசிற்கும் நாயக்க அரசிற்கு மிடையே தொடர்ந்து போர்கள் நடைபெற்றுள்ளன. திருச்சியை அடுத்த சீரங்கம், மைசூரை அடுத்த சீரங்கப் பட்டணத்தைப் போன்றே தனித்த வளமை மிக்க ஒரு தீவாகக் காவிரியாற்றிடை இருப்பதும் பெருவலிமிக்க கோட்டை கொத்தளத்துடன் விளங்குவதும் சீரங்கத் தையும் சீரங்கப் பட்டணத்தையும் சமநிலையில் மதிக்கத்தக்கதா யுள்ளது அதனானே பட்டணம் என்ற அடை சீரங்கத்திற்குப் பொருந்தி சீரங்கப்பட்டணமாக வழங்கியுள்ளது.

நிரிதி திசை என்பது தென்மேற்குத் திசையாகும்.[13] ஆதலின் திருச்சி சாலையில் கரந்தைக்குத் தென்மேற்கே மூலையில் இச்சத்தி ரம் கட்டியுள்ளனர் என ஆறாம் வரிக்குப் பொருள் காண்பது நேரிது. ஏழாம் வரியில் காணப்படும் 'அரியாறு' என்பது வீரசோழ வடவாறாதல் வேண்டும். பதினேழாம் நூற்றாண்டிலும் அதனை யடுத்த நூற்றாண்டுகளிலும் வடவாறு பல்வேறு பெயர்களால் வழங்கப்பட்டமையினைத் தஞ்சையொடு தொடர்புடைய புராண, இலக்கிய வரலாறுகளில் காணமுடிகிறது.[14] அப்பெயருள் 'அரி யாறு' என்பதும் ஒன்றாதல் வேண்டும்.

திருமலை நாயக்கருக்கு முன்பே தமிழகத்தில் கிறித்துவக் கும் பினியினரும், கிறித்துவ சமயப் பாதிரியார்களும் சிறிது சிறிதாகச் செல்வாக்குப் பெற்று தமிழக இந்துக்களை மதமாற்றிக் கொண் டார்கள். அத்தகு மனமாற்ற, மதமாற்றத்திற்கு அடிப்படைக்

காரணங்களாக ஆங்கில நிறுவனங்கள் அளித்த மருத்துவமும், கல்வியும், பாதிரிகள் ஏழைகளிடத்தும் துன்பமுற்றோரிடத்தும் காட்டிய பரிவும், மதமாறியவர்களுக்குக் கும்பினியர் காட்டிய சலுகையும், பொருளும் அமைந்தன.

'எறும்பூரக் கல் தேயும்' கதையாக தினப்படிச் செபமும், ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்ற பூசையும் பிறவும் மக்களின் மதமாற்றத்திற்கு வழிகோலிய அக்காலத்தில்தான் திருமலை நாயக்கர் ஆட்சி அமைந்தது.

இப்படி ஐரோப்பியர் செல்வாக்கால் தம் நாட்டு மக்கள் மதி மயங்குதல் கண்டு, அவர்களின் எதிர்காலத்தைச் சிந்தித்தே திருமலை நாயக்கர் பல அறச்செயல்களை நிகழ்த்தியுள்ளார்.[15] புதிய கோயில்கள் கட்டுதலும், திருப்பணி செய்தலும், குளந் தொட்டலும், அவற்றான் பல்வேறு திருவிழாக்களை நடத்தி, மக்களை மதமாற்ற மனவேறுபாடுகளில் மயங்காதபடித் 'தடுத்தாட்கொள்ள முனைந்தமை—நாயக்கராட்சியில் நிகழ்ந்த பேரறச் செயல்களை நுணுகி ஆய்ந்தால் புலனாம்.

கிறித்துவ மடங்கட்கு எந்தவிதத்திலும் தாழ்வுபடாவகையில் தமிழகத்தின் பழம்பெரும் ஆதுரச்சாலைகள், தருமச்சாலைகள், சுமை தாங்கிகள் முதலியனவற்றைப் புதுக்கியும் புதிதாகக் கட்டியும் மக்கட்குத் தொண்டாற்றி அருள்புரிந்துள்ளான். அவ்வணம் திருமலை நாயக்கர் காலத்தில் எழுந்த சத்திரங்கள் அவனாலும், அவனது அரசியலதிகாரிகளாலும், குடிமக்களாலும், எழுப்பப்பட்டு உள்ளமை கண்கூடு.

அப்படிப்பட்ட தன்ம சத்திரங்களுள் ஒன்றே இக்கரந்தைச் சத்திரம். இதனைக் கட்டிய அச்சுதப்ப செட்டியார் மன்னனை 'திருமலை நாயக்கராய அய்யன்' எனக் குறித்திடும் பாங்கு மக்கள் மன்னன்பால் கொண்டிருந்த அன்பு நெறியினைக் காட்டுகிறது. அவ்வணம் சிறந்த மன்னனது அருள் உள்ளத்தின் சான்றென இத் தரும சத்திரம் கட்டிட அளவில் இலங்கிடுதல் இன்றும் காணத்தக்கதாயுள்ளது.

சுருக்கக் குறியீடுகள்:

1 கரந்தைச் சத்திரக் கல்வெட்டு (க. ச. க)
2 மதுரை நாயக்கர் வரலாறு(ம. நா. வ)
அ, கி. பரந்தாமனார்.

கரந்தைப்
பாடற் கல்வெட்டு:

பதினொன்று—ஒன்பது—'எண்பத்திரண்டு சனிக்கிழமையன்று யான், தமிழ்ப்பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறைப் பேராசிரியர் திரு. புலவர் செ. இராசு, எம். ஏ., அவர்களுடன் கரந்தை இராச கோரி இடுகாட்டுப் பகுதியினை ஆய்வு செய்ய நேர்ந்தது. அது போது,

தஞ்சை—திருவையாறு பழஞ்சாலையின் வலப்புறத்தில் இராச கோரியின் கிழக்கே தூர்ந்து போகி, தற்போது குடிசைகள் கட்டப் படும் குளத்தின் சிதைந்த படிகட்டுப் பகுதியில் இக் கல்வெட்டுத் துண்டு காணக்கிடைத்தது.

'வெள்ளை ராசி' எனும் வகைக்கல் இது. எழுத்தமைதி கொண்டு காணும்போது இக்கல்வெட்டு கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் கருதமுடிகிறது. →

---

3 History of the Nayaks of Madura (H. N. M.), R. Sathyanath Iyer, University of Madras-1980
4 Tamil Lexican (T. L.), 1931
5 The Great Temble at Tanjore (G.T.T)

அடிக் குறிப்புகள்:

1 இத் தென்னந் தோப்பு ஸ்ரீ ஆதீஸ்வரஸ்வாமி கோயிலுக்குச் சொந்தமானது.
2 க. ச. க. வரி. 1
3 அதே.
4 சாலிவாகன சகாப்தம் 1557க்குச் சரியான கி. பி. ஆண்டு 1636 ஆகும்.
5 ம. நா. வ. பக். 152
6 க. ச. க. வரிகள் 4-5
7 ,, வரி 10
8 ,, வரி 9
9 ,, வரிகள் 2-3
10 ,, வரி 4
11 ம. நா. வ. பக். 153
12 அதே
13 T. L. Vol IV part III P. 1269
14 G T. T. P. 29
15 H N. M P. 108

——(o)——

இக்கல்வெட்டில் காணப்படும் வரிகளின் கூடுதல் ஐந்து ஆகும். சொற்கள் அனைத்தும் செந்தமிழ்ச் சொற்கள்; செய்யுட் சொற்கள். வட எழுத்தோ, சொல்லோ காண்கிலது.

முன்னிரண்டு வரிகளும் ஒரு பாடலின் இறுதிப்பகுதியாக உள்ளன. பின் மூன்று வரிகளும் ஒரு கட்டளைக் கலித்துறைப் பாவின் முதற்பகுதியாக உள்ளன.

கல்வெட்டு:

''......... நீரத்து வெண்ணகத்
தேயென்னுங் காடவனே''
''திசையாலையங் கொண்
டுலாயவெண் டேர் கண்டு
சென்றீயனீர் நசையாலை.........''

முன்னிரு வரிகளின் இறுதி 'காடவனே' என விளித்தலாக முடிபு கொண்டுளது.

பின் மூன்று வரிகளில் ''திசைகளில் திரிதரும் வெள்ளிய தேர் கண்டு சென்ற நீர் ஆசைகொண்டு ...'' என்ற பொருள் பொதிந்த தொடர்களைக் கொள்ள முடிகிறது. திசைகளில் அழகிய தேரில் உலா வரும் தலைவனைக் கண்டு மகிழ்ந்து நசையுறுவது தமிழின் உலா இலக்கிய மகளிர்க்கு இயல்பு. ஆதலின் ஈண்டு ஓருலா விலக்கியத் தொடர்களாக இவைகள் தோற்றந் தருகின்றன.

முற்காலத்தில் தமிழ்க் கல்வெட்டுக்களில் பெரும்பாலும் மெல்லெழுத்துகளுக்குப் புள்ளி வைப்பது இல்லை. ஆயின் இக்கல்வெட்டில் மெய்யெழுத்துக்கள் அனைத்தும் புள்ளி பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கல்வெட்டுத் துண்டுக்கல் பன்னிரண்டு—ஒன்பது—எண்பத்திரண்டு ஞாயிறு அன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இருவகைத் திருமேனிகள்

செப்புத் திருமேனிகள் இருவகைப்படும். முழுவதும் கனமாகச் செய்யப்பட்ட செப்புத் திருமேனிகள் என்றும் உள்ளே பொள்ளலாகச் செய்யப்பட்ட திருமேனிகள் என்றும் இருவகைப்படும். தமிழகத்தில் செய்யப்பட்ட திருமேனிகள் அனைத்தும் முழுதும் கனமாகச் செய்யப்பட்ட செப்பு உருவங்களாகும். பல வாகனங்கள் கனப் பொள்ளலாகச் செய்யப்பட்டவை. —இரா. நாகசாமி,
தமிழகக் கோயிற் கலைகள்.

பீடன்று

சொ. சண்முகானந்தம்
(பாரதிப் பித்தன்)

சிலப்பதிகாரத்தில் கண்ணகிக் கூற்றாக வரும் 'பீடன்று' என்கிற தொடர் மெய்யாகவே எத்தகைய பொருளில் சொல்லப் பட்டது என்பதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கோவலனைப் பிரிந்து கண்ணகி வாடும் நிலையைக் காணப் பெறாத தேவந்தி அவள் வாழ்வு மறுமலர்ச்சி அடையவேண்டி தனது வழிபடும் தெய்வத்திற்கு அறுகம்புல் முதலியவற்றைத் தூவி வழிபாடு செய்தவளாய் கண்ணகியிடம் வந்து, கணவனை நீ பெறுவாயாக'' என வாழ்த்துகிறாள். அவளது வாழ்த்தை ஏற்றுக் கொண்ட கண்ணகி தான் கண்ட தீக்கனா ஒன்றைச் சொல்கிறாள். அதனைக் கேட்டுப் பின் கண்ணகி கணவனை மீண்டும் சேர ஒரு வழி சொல்கிறாள்.

'' நீ முற்பிறப்பில் கணவன் பொருட்டுக் காக்கவேண்டிய நோன்பு தப்பினாய். ஆகவே அதற்குக் கழுவாயாகக் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் உள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய இரு பொய்கைகளில் மூழ்கி, மன்மதன் கோயிலுக்குச்சென்று வழிபட்டால் கணவனை மீண்டும் அடையலாம்'' என்கிறாள்.

இதற்குப் பதிலாகக் கண்ணகி ''பீடன்று''[1] என்று கூறு கிறாள்.

' பீடன்று ' என்ற இத்தொடருக்குப் ' பெருமை இல்லை ' என்பதே பொருள்.

யாருக்குப் பெருமை இல்லை என்கிறாள் கண்ணகி ?

பீடன்று என்ற வாக்கியத்திற்கு எழுவாய் எது ?
இவ்வாக்கியம் அஃது என்னும் தோன்றா எழுவாயைக் கொண் டிருப்பதாகக் கொள்ள வேண்டும்.

அஃது எனில் எஃது ?...........

பெருமையற்றது எது ? யாருக்குப் பெருமையற்றது ? என்ற இரண்டு கேள்விகள் முளைக்கின்றன.

முனைவர் உ. வே. சாமிநாதய்யர். நாவலர் ந. மு. வேங்கட சாமி நாட்டார் ஆகிய இருவரும், ''எங்கட்குப்'' பெருமை இல்லை என்றே விரித்து எழுதி உரை செய்துள்ளார்கள்.

கண்ணகி தன் கணவனையும் உளப்படுத்திக் கூறியதாகக் கொண்டு '' எங்கட்கு '' என விரித்து உரை செய்திருக்கலாம் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

''எங்கட்கு'' என்ற சொல் யாரைக் குறிக்கின்றது என்பது ஒரு கேள்வி. கண்ணகியை எனில் தன்மைப் பன்மை தேவை யில்லை. அதற்கு முன்னதாக ஏன் பெருமையில்லை என்றாள் என்பதற்கான காரணத்தைச் சிறிதும் ஆராயலாம்.

''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை''[4]

என்ற குறள் வழி நின்றும்,

''சாம்எனில் சாதல்நோதல் தன்னவன் தணந்தகாலைப்
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை யென்னுஞ் சொல்லார் கணவற்கை தொழுது [வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பர் சேர்ந்தவன் செல்லல் [தீர்ப்பார்''[5]

என்ற சீவகசிந்தாமணிப் பாடல் வழி நின்றும் இத்தொடர்க்கு முனைவர் உ. வே. சாமிநாதய்யரும், ந. மு. வே. நாட்டாரும்,

''கற்புடை மகளிர் கணவனை யன்றிப் பிற தெய்வத்தை வணங்குதல் இயல்பன்றென்பது''[6] மேற்கண்ட குறட்பாவாலும், சிந்தாமணிச் செய்யுளாலும் அறியப்படும் என்று குறிப்புரை எழுதி யுள்ளார்கள்.[7]

'' தெய்வம் தொழாஅள் '' – எனத்தொடங்கும் குறட்குப், பெண்கள் திருமணம் ஆனவுடன் கோவிலுக்குப் போகக் கூடாது ; கடவுளையே வழிபடக் கூடாது; நாத்திகர் ஆகிவிடவேண்டும் – என்றா பொருள்? இஃது அறிவுக்கும், நடைமுறைக்கும் பொருந்துமா? திருமணமான பெண்கள் கணவனையே கண்கண்ட தெய்வமாகப் போற்றக் கடமைப் பட்டவர்கள் என்பதுதான் பொருளேயன்றிக் கல்யாணமான பெண்கள் கடவுளை வழிபடுவது கற்புக்கு குறையாகும் என்பதா பொருளாக இருக்கமுடியும்?

திருமணமானவுடன் கோவிலுக்குப் போகாமலே இருந்து விடலாம். கடவுளை மனத்தாலும் நினைக்காமலிருக்க முடியுமா? அப்படியானால் கணவனையும், கடவுளையும் நேசிந்த காரைக் காலம்மையார் கற்பிழந்தவரா?

ஆகவே, ''தெய்வம் தொழாஅள்'' – என்னும் குறட்குக் கணவனை முதல் தெய்வமாக மனைவி கருதவேண்டும் என்பது தான் பொருளேயன்றிக் கடவுளை மனத்தாலும் நினைக்கக்கூடாது என்பது வள்ளுவர் கருத்தாக இருக்க இயலாது.

ஆகவே, கண்ணகி ''பீடன்று'' என்று பதிலளித்தது அந்தப் பொருளாக இருத்தற்கில்லை.

துறை மூழ்குதல், முதலிய சடங்குகள் இயற்றுவதைக் கழுவா யாகத் தெரிவிப்பவள் தேவந்தி என்னும் பார்ப்பனத் தோழி.

அவள் சொல்லுகின்ற துறை மூழ்குதல் முதலாய சடங்குகள் இந்து சநாதன தர்மத்திற்கு உரியனவே அன்றிச் சமண சமயத் திற்கு உரியவை அல்ல அதுமட்டுமன்றி இவை சமண சமயத் தவரின் கேலிக்குரிய பொருளாகக் கருதப்பட்டவை. சிலப்பதி காரத்திலும் சீவகசிந்தாமணியிலும் அதற்கு ஆதாரங்கள் உண்டு. கவுந்தியடிகட்கும், கோவலன் கண்ணகிக்கும், மதுரை வழிகாட்ட முற்படுகின்றான் மாங்காட்டு மறையோன் என்பான்.

அவன், ''நீங்கள் கொடும்பாளூரின் கண் நெடுங்குளக்கரைக்குச் சென்றால் மூன்று வழிகள் பிரியும். அதில் வலப்பக்கம் சென்றால் தென்னவன் சிறுமலை தோன்றும். ஒருகால் அவ்வழியே செல் லாமல் இடப் பக்கமாகச் செல்வீராயின், அழகர் திருமலை வரும். அதில் பிலம் ஒன்று உண்டு. அந்தப் பிலத்தினுள்ளே புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி – என்ற மூன்று குளங்கள் உண்டு. அவற்றில் புண்ணிய சரவணம் என்னும் பொய்கையில் மூழ்கினால் இந்திரன் செய்த ஐந்திர இலக்கணத்தை அறிவீர். பவகாரணியில் மூழ்கினால் பழம் பிறப்பு உணர்வீர். இட்ட சித்தியில் மூழ்கினால் எண்ணியதெல்லாம் பெறலாம்''-என்கிறான்.

இதனைக் கடுமையாகவே சாடுகிறார் சமணத் துறவியான கவுந்தியடிகள்,

''நலம்புரி கொள்கை நான்மறை யாளா!
பிலம்புக வேண்டும் பெற்றி ஈங்கில்லை;
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டு - இயற்கையின் விளங்கக் காணாய்;
இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணாயோ நீ?
வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ, எய்தா அரும்பொருள்''?[8]

என்று பதிலிறுக்கிறார்.

தொங்கும் உறிகளில் கிடக்கும் காய்கனிகளை உண்டால் வினைகள் தீரும் என்பது திருமால் கருத்தாயின் தலைகீழாய்த் தொங்கும் வவ்வால் அதனையடுத்துள்ள காய்கனிகளைத் தின்ன அதன் பழவினை நீங்கப்பெறுமே?

புல்லைத்தின்று தீயிடையே நின்றால் வினைகள் நீங்கும் எனில் கல்லையுண்டு கடுமையான வெஞ்சுரத்தில் வாழும் புறாவுக்கும் அது நடக்குமே!

சடைவளர்த்து நீர் நிலைகளில் மூழ்க வரகதி கிடைக்கும் என்றால் கயம்மூழ்கும் கரடிக்கும் அது கிடைக்குமே. ஆகவே உங்கள் வெற்றுரையை விடுங்கள் என சித்திரகூடப் பள்ளியில் வான பிரஸ்தம் மேற்கொண்டிருக்கும் இந்துக்களைப் பலித்து சீவகன் கூறுவதாக சிந்தாமணியில் காணப்படுகிறது,

''நான்மறையாளனே! நீ கூறிய பிலத்தின்கண் புகுதற்குரிய தன்மை எம்மிடத்தில்லை. ஏனென்றால் இந்திரன் செய்த வியா கரணத்தினை அருகதேவன் அருளிய பரமாகத்தின்கன் தோன்றக் காண்பாய். நீ முற்பிறப்பிலே செய்தன யாவும் இப்பிறப்பிலே காண்கின்றிலையோ? ஆதலால் யாம் பவகாரணி மூழ்குதல் வேண்டா; உண்மை நெறியிற் பிறழாது பிற உயிர்களைப் பேணு வோர்க்கு அடையக்கூடாத அரிய பொருள் சிறிதேனும் உண்டா? இட்டசித்தியிலும் மூழ்க வேண்டுவதில்லை என்பது இதன் பொருள்.

கண்ணகிக்குத் துறைமூழ்கல் முதலிய தர்மத்தைச் சொல்லும் தேவந்தியும், பவகாரணி முதலியவற்றின் சிறப்பினைக் கவுந்தி யடிகட்குக் கூறும் மாங்காட்டு மறையவனும் ஆகிய இருவருமே இந்து சமயப் பிராமணர்கள் என்பது இங்கு நினைவூட்டிக் கொள்ளத் தக்கது. பழங்காலத்தில் இந்து சநாதன தர்மத்தின் பிரதிநிதிகளாக விளங்கியவர்கள் பார்ப்பனர்களே. ஆகவே கண்ணகி பீடன்று எனத் தேவந்திக்கு கூறியதன் பொருள்,

> ''துறை மூழ்கல் முதலிய தர்மங்கள் உங்கள் இந்து சமயத்திற்குப் பெருமை தருவனவே அன்றி எங்கள் சமண சமயத்திற்குப் பெருமையல்ல என்பதாகும்''.

அப்படியானால் இன்னொன்றை ஆராய்ந்து உறுதி செய்யவேண்டி யுள்ளது.

கண்ணகி சமண சமயத்தைச் சேர்ந்தவள் என்பதற்கு அகச் சான்றுகள் சிலம்பில் உள்ளனவா என்பதை ஆராயவேண்டும்.

பின்கண்ட காரணங்களைக் கொண்டு கண்ணகி கோவலன் இருவரும் சமணர்கள் எனத் தீர்மானிக்கலாம்.

(1) பூம்புகாரை விட்டு வெளியேறும் கண்ணகியும் கோவலனும் மணிவண்ணன் கோட்டம், இந்திர விகாரம், உலக நோன்பிகள் இட்ட சாரணர் சிலாதலம் ஆகிய இடங்களைக் கடந்து செல்கிறார்கள். இவற்றில் மணிவண்ணன் கோட்டம் வைணவ சமயத்திற்கு உரியது. இந்திர விவகாரம் பௌத்தர்கட்கு உரியது. உலக நோன்பிகள் அமைத்த சிலாதலம் சமணர்க்கு உரியது, கோவன் கண்ணகி இருவரும் சமணக்கோயிலை மட்டும் தொழுது வலங்கொண்டு போனதாக இளங்கோவடிகள் கூறுகிறார்.

''உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட இலகொளிச் சிலா தலம் தொழுது வலங்கொண்டு'' என்பது அடிகள் வாக்கு.

ஆனால் பிற கோட்டங்களைக் கூறும்போது, ''தொழுது'' என்ற சொல்லை அடிகள் கவனமாகத் தவிர்த்திருக்கிறார்.

(2) கண்ணகி, கோவலன் இருவரும் தனது இருப்பிடத்திற்கு வரக்கண்ட சமணத் துறவியாகிய கவுந்தியடிகள் அவர்களை வரவேற்கும்போது'

''பெருமகன் திருமொழி பிறழா நோன்பும் உடையீர்''10 எனக் குறிப்பிடுகின்றார்.

''பெருமகன் திருமொழி பிறழா நோன்பு'' என்பதற்கு அருக தேவனின் ஆகமக் கூற்றினின்றும் தப்பாத விரதம் என்பதே உரையாகும்.

(3) கோவலன் மதுரைக்குப் போகுமுன் கவுந்தியடிகளைக் கண்டு வழிபட முற்பட்டமையின் அவன் தனது சமயக்குருமாரை-ஞானாசிரியனை வழிபட முற்பட்டதாகவே கொள்ள வேண்டியிருக்கிறது.

(4) கண்ணகியை வழிநடைப் பயணத்திற்குத் தயார் செய்ய அறிவுரை வழங்கக் கோவலனிடம் கூற முற்படும் கவுந்தியடிகள்,

கண்ணகி தேன் கலந்த நீரைத் தப்பித் தவறிக் குடித்து விடாமல் பார்த்துக்கொள்ளுமாறும்.

நடந்து வரும்போது காலடியில் வண்டு முதலியன பட்டு இறந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுமாறும் அறிவுரை கூறுகின்றார்.

தேனை வெறுத்தலும், நடக்கும்போது உயிர்க்கு உறுகண் செய்யாமையும் சமணசமயக் கோட்பாடுகளாகும் என சிலப்பதிகரா உரையாசியர்களே நினைவூட்டத் தவறவில்லை.

''கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்

அடங்கா வேட்கையின் அறிவஞர் எய்திக்
குடங்கையின் தொண்டு கொள்ளவும் கூடும்''[11]

''பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞர் எய்தி
அறியா தடியாங்கு இடுதலும் கூடும்''[12]

என்பது அடிகளார் வாக்கு.

(5) கண்ணகியும், கோவலனும் மாதரியின் பொறுப்பில் விடப் பட்டபோது, அவர்கள் சமைத்து உண்பதற்காக மாதரி காய் கனிகளைத் தருகிறாள். அவள் இவ்வாறு அவர்கட்குத் தருவதற்கு ஒரு காரணம் கூறுகிறாள்.

கோவலன் சமணன் ஆகையால் காய்கனிகளைத் தந்து தனி யாகச் சமைத்து உண்ணச்சொன்னாள், என்று சிலம்பு கூறுகிறது.

''சாவக நோன்பிக ளடிகள் ஆதலின்
அடிசில் ஆக்குதற்கு அமைந்த நற்கலங்கள்
நெடியாது அளியின் நீரென''[13]

என்பது இளங்கோவடிகள் வாக்கு.

அடிகள் என்பது இங்குக் கோவலனைக் குறிக்கிறது.

சாவகர் என்ற சொல்லுக்குச் சமணர் என்பதே பொருள்.

(6) கோவலனும், கண்ணகியும் இறந்தனர் என்பதைக் கேள்வியுற்ற கண்ணகியின் தந்தை சமணத் துறவியாகிவிட்டார், என்பது சிலம்பு தரும் செய்தி.

''கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பொருந்தவத்து ஆசீ வகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்''

என்பது சிலப்பதிகாரச் செய்யுளாகும்.

ஆசீவகர் என்போர் சமணசமயத்தில் ஒரு பிரிவினர்.

மேற்கண்ட ஆறு காரணங்களால் கண்ணகி கோவலன் ஆகியோர் சார்ந்திருந்தது சமண சமயம் எனத் தெளிவாவதால் ''பீடன்று'' என்ற தொடர் மேற்சொல்லப்பட்ட பொருளுடையதே யாகும்.

சமணசமயக் கொள்கைக்கு இணங்க கடவுளை வணங்கல் கற்புடை மகளிர்க்குப் ''பீடன்று'' எனப்பொருள் கொள்வதுதான் பொருத்தமாக உள்ளது.

மேற்கோள் :

(1) சிலம்பு; கனாத்திறம் உரைத்த காதை, வரி 64.
(2) சிலம்பு; ந மு. வே. நாட்டார் உரை, ப. 217.
(3) சிலம்பு; முனைவர் உ. வே. சா. உரை, ப. 250.
(4) குறள்; அதிகாரம் 6, பாட்டு 5.
(5) சிந்தாமணி, பாடல் 1598.
(6) சிலம்பு; கனாத்திறம் உரைத்த காதை, ப. 217, 218 (ந. மு. வே. நாட்டார் உரை).
(7) சிலம்பு; உ. வே, சா. உரை, ப. 250.
(8) சிலம்பு; நாடுகாண் காதை, வரி. 25.
(8)ஏ சீவகசிந்தாமணி — பாட்டு 1427, 1429, 1430,
(9) சிலம்பு; வரி 46—47.
(10) சிலம்பு; வரி 82—85.
(11) சிலம்பு: வரி 87—89.
(12) சிலம்பு; கொலைக்களக் காதை.
(13) சிலம்பு; நீர்ப்படைக் காதை,

8ஏ.) அணி கிளர் அரவின் அறிதுயி லமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து
எனவும்,
அந்தர சாரிகள் அறைந்தனர் சாற்றும்
இந்திர விகாரம் ஏழுடன் போகி
எனவுமே பாடியுள்ளார்.

திருக்குறள்
பொருள் விளக்கம்

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

அறநெறிமையின் முதன்மையினை அறிந்ததனால் விளைவதாகிய பயன்தாம் என்னை? அறநெறியினைக் கண்ட பேரிறைவனின் நன்னெறியினைக் கண்டு அந்நெறிப்பட்டு வாழாதார் எனும் போழ்து!

—கா. அ.

பூம்புகாரும்—

புதைபொருள் ஆய்வுகளும்

—மோ. அந்தோனிராசு, பி. லிட்., நி. நிலை மாணவர்.

முன்னுரை:

பண்பிற் சிறந்த பண்டைத் தமிழகத்தைப் பாங்குடன் அரசோச்சி வந்த முரசுமுழங்குதானை மூவேந்தருள் ஒருவராகிய சோழர்களின் சிறந்த கடற்கரைப் பட்டினமாகவும், கலை வளரும் நிலையான இடமாகவும் திகழ்ந்த பூம்புகார் குறித்துச் சங்க நூல்கள் தரும் செய்திகளையும், அது தொடர்பாக நடைபெற்றுள்ள புதைபொருள் ஆய்வுகளையும் ஒப்பிட்டு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொருத்தமும் சரியானதும் கூட:

> "பூம்புகாரில் செய்த அகழ்வாய்வுகள் அந்நகரம் முழுமையும் அழிந்துவிட்டது என்ற எண்ணத்தைப் போக்கிப் பல பகுதிகள் புதையுண்டு கிடக்கின்றன என்னும் உண்மையைக் காட்டுகின்றன. அங்கு வெளிக்கொணரப்பட்ட மூன்று முக்கியக் கட்டடங்களும், குறிப்பாகப் பௌத்தப் பள்ளியொன்றும், உரோமனியர் விட்டுச் சென்றுள்ள சான்றுகளும் தமிழக வரலாற்றில் புதிய அத்தியாயத்தைச் சேர்த்துள்ளன. அச்சான்றுகள் சங்க இலக்கியச் சான்றுகளுடன் ஒத்துள்ளன."[1]

என்று வரலாற்றுப் பேரறிஞர் முனைவர் கே. கே. பிள்ளை கூறுவதால் புகார் பற்றிய சங்க இலக்கியச் செய்திகளையும், அது தொடர்பான தொல்பொருளாய்வுகளையும் ஒப்பிடுவது பொருத்தமானதும் சரியானதும் கூட.

புகார் பற்றிக் கூறும் இலக்கியங்கள்—காப்பியங்கள்:

பூம்புகாரின் அமைப்பினை—சிறப்பினை — வளத்தினை — கலை நலத்தினை பற்றிய செய்திகளை பட்டினப்பாலை, பதிற்றுப் பத்து, பொருநராற்றுப்படை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களும், சிலம்பு, மணிமேகலை முதலிய காப்பியங்களும் கூறுகின்றன.

பட்டினப்
பாலையில் புகார்:

காவிரிப்பூம்பட்டினம், சோழபட்டினம், புகார், சம்பாவதி என்றெல்லாம் இலக்கியங்களில் கூறப்படும் பூம்புகார் சிறந்த வணிகத் தலமாகவும், பல்வேறு நாட்டினரும் வந்து செல்லும் துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியது. துறைமுகச் செய்திகளையும், அங்கு நடைபெற்ற வணிகப் பொருட்கள் பற்றியும், ஏற்றுமதி, இறக்குமதி பற்றிய தெளிவான விவரங்களையும் பட்டினப்பாலையில் காண்கின்றோம்.

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்
நீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலும்
ஏமாப்ப வினிது துஞ்சி ....''[2]

என்னும் வரிகள் புகார்த் துறைமுகத்தில் என்னென்ன பொருட்கள் எங்கெங்கு இருந்து இறக்குமதி அல்லது ஏற்றுமதி ஆயின என்பவற்றைப் பற்றி விளக்கும் பட்டியல் ஆகும்.

''கடலிலே காற்றான் வந்த நிமிர்ந்த செலவினையுடைய குதிரைகளும், கடலிலே காற்றான் வந்த கரிய மிளகுப் பொதிகளும், மேருவிலே பிறந்த மாணிக்கமும், சாம்பூநதமென்னும் பொன்னும் பொதியில் மலையிலே பிறந்த சந்தனமும், அகிலும், தென்றிசைக் கடலில் பிறந்த முத்தும், கீழ்த்திசைக் கடலில் பிறந்த பவளமும், கங்கையாற்றில் உண்டாகிய பொருளும், கடாரத்திலே உண்டான நுகரும் பொருள்களும், 'சீனம் முதலிய இடங்களினின்றும் வந்த கருப்பூரம், பனிநீர், குங்குமம்' முதலியனவும்''[3]

என்று உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் மேற்காணும் வரிகளுக்கு உரையெழுதி யுள்ளமையும், காவிரிப்பயனும், ஈழத் துணவும்' என்னும் சொற்றொடர்களுக்கு, ''காவிரியால் உண்டாகிய பொருள்களும், சிங்கள தேசத்திலிருந்து வந்த நுகர்

பொருள்களும் என்க''[4] என்று முனைவர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தருகின்ற குறிப்பும் கவனிக்கற்பாலன.

பட்டினப்பாலை கூறும் கடல்வாணிபச் சிறப்பும் கடல் வாணிபம் நடந்தேறிய பூம்புகார் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கிய உண்மையும் இதுபோழ்து நடைபெற்ற கடலாய்வுகள் உறுதி செய்வதை,

''... ... கட்டிடங்கள், கடலுக்கு அடியில் மூழ்கிக் கிடப்பதைக் கண்டுபிடித்து இருக்கிறோம். கப்பலின் உடைந்த பகுதிகள், கடலில் மூழ்கிக் கிடப்பதும் தெரிய வந்துள்ளன. ஒருகாலத்தில் பூம்புகார் ஒரு பெரிய துறைமுகப் பட்டினமாக விளங்கியதை இஃது உறுதிப்படுத்துகிறது''[5]

என்று முனைவர் நாகசாமி அவர்கள் உரைத்துள்ள கருத்தும் பட்டினப்பாலை பகர்கின்ற துறைமுகச் செய்தி பொய்மையன்று மெய்மையே என்று உறுதிப்படுத்துகிறது.

''பறழ்ப் பன்றிப் பல்கோழி
உறைகிணற்றுப் புறச்சேரி''[6]

இருந்ததாகப் பட்டினப்பாலையில் சொல்லப்பட்டுள்ள செய்தியும் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கண்டுபிடிக்கப் பட்ட அந்த உறைகிணறுகளின் அமைப்பைப்பற்றி,

''இக்கிணறுகளின் புறங்கள் சுடுமண் பூசப்பட்டும், அதன்மேல் கெட்டியான களிமண் பூசப்பட்டும் விளங்கின''[7]

என்று முனைவர் நாகசாமி அவர்கள் குறிப்பிடுகிறார்.

''பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
. . . .
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கி''[8]

எனும் வரிகட்கு,

''பெறுதற்கரிய பழைய தலைமையினையுடைய சுவர்க்கத்தை ஒக்கும் நெடிய கால்களையுடைய மாடம்''[9]

என்று நச்சர் உரையால் அறியமுடிகின்ற மாடங்களோடு கூடிய கட்டடங்கள் இக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளன என்பதை,

''......கட்டடச் சிதைவுகளையும், செங்கல் குவியல்களையும் உடைந்த மட்பாண்டங்களையும் பல இடங்களில் கண்டோம்''[10]

என்று முனைவர் கே. வி. இராமன் அவர்களும்,

''அலைகளால் அரிக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளின் அடியில் பண்டைய செங்கற்களும். மற்ற சின்னங் களும், தெரிகின்றன''[11]

என்று முனைவர் நாகசாமி அவர்களும் கூறுவன கொண்டு அறியலாம்.

''புகழ்நிலைஇய மொழிவளர
அறநிலைஇய வகனட்டில்''[12]

என்னும் வரிகட்கு ''இருமையினும் பெறும் பயனுண்டாகச் சோறிடும் சாலை''[13] இருந்தது என்றும்,

''. . . . . .பலசாலைத்
தவப்பள்ளி . . . .''[14]

என்ற வரிகளுக்கு உரையாசிரியர் நச்சர் எழுதும் உரையின்படி ''தவம் செய்யும் அமணபள்ளி, பௌத்தப் பள்ளிகளும்''[15] இருந்தன என்றும் அறிகின்றோம். இந்தப் பௌத்தப் பள்ளி ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து மூன்று — அறுபத்து நான் காம் ஆண்டு நடைபெற்ற அகழ்வாய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப் பட்டு, இன்றும் மத்திய தொல்லாய்வுத் துறையினரால் பாது காக்கப்பட்டு வருகிறது.

காவிரிப்பூம் பட்டினத்தில் புத்த மதம் செல்வாக்குடன் விளங்கி யிருக்க வேண்டும் என்ற உண்மை, கண்டுபிடிக்கப்பட்டுள்ள பௌத்தப் பள்ளியின் மூலம் தெளிவாகின்றது.

''செம்புப் பண்பாட்டுக் காலத்தைச் சேர்ந்த(chalcolithic Age) கட்டடங்கள் தமிழ்நாட்டில் போதுமான அளவில் இல்லை. இருந்தபோதிலும் காவிரிப்பூம் பட்டினத்தில் கி. மு. இருநூற்று ஐம்பதாம் ஆண்டள விலேயே சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டடங் கள் கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன''[16]

என்று அறிஞர் கே வி. இராமன் குறிப்பிடுவதால் 'கொடுங்கான் மாடம்' என்றும், 'ஒண்சுவர் நல்லில்' என்றும், 'பிறங்குநிலை மாடம்' என்றும் பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ள கட்டட அமைப்புகளே, முனைவர் இராமன் குறிப்பிடும் ஆதாரங்க ளோடு கூடிய செய்தியாகும்.

உரோமாபுரியில் மட்டுமே செய்யப்படுகின்ற ரௌலட்டட் (Rouletted) என்றழைக்கப்படும் மட்பாண்டங்கள் 'அரிக்கமேடு,

காவிரிப்பூம் பட்டினம், உறையூர், செங்கமேடு, காஞ்சி போன்ற இடங்களில் கிடைத்துள்ளன[17] என்ற செய்தி நமக்குக் கிடைப்ப தால் பட்டினப்பாலை பகர்வதுபோன்று, பன்னாட்டுக் கப்பல் களும், குறிப்பாக உரோமர் நாட்டுக் கப்பல்களும் அடிக்கடி பூம் புகாருக்கு வணிகம் செய்யும் நோக்கில் வந்து சென்றுள்ளன என்பது உறுதிப்படுகின்றது.

''புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்''[18]

புகாரிலிருந்தது என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. பண்டங்களிலேகூட அஃதாவது மக்கள் பயன்படுத்தும் ஒவ் வொரு பொருளிலும் கூட புலிவடிவம் பொறிக்கப்பட்டிருந்தது என்றால், உறுதியாக அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட காசு களிலும் சோழர்களின் இலச்சினையான புலி உருவம் பொறிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று நாம் கருத இடமுள்ளது.

''காவிரிப்பூம்பட்டினத்தில் புலி உருவம் பொறித்த பழங்காசுகள் நான்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன''[19]

என்று அறிஞர் கே. வி. இராமன் கூறுவதால், நமது கருது கோளும் மேலே காட்டப்பட்ட இலக்கியச் செய்தியும் வரலாற்று வடிவம் பெறுகின்றன.

படகுகள் வந்து தங்கிச் செல்லும் துறைகள் இருந்தன என்பதாகப் பட்டினப்பாலையில் கூறப்படும் செய்தியும் கூடத் தொல்லாய் வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்திலே கூறப்படும் இத்தகைய சிறிய முன்துறைகளே (Brick-Jetty) இக்காலத்திலே இருக்கும் துறைமுகம் போன்ற அமைப்புகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம் என்பது என் கருத்து. நாம் இப்படித் துணிந்து கூறுமளவிற்கு,

''இந்தச் செங்கற்கள், நன்றாகப் பதப்படுத்தப்பட்ட களிமண்ணைக் கொண்டு செய்யப்பட்டு, ஈராயிரம் ஆண்டுகளாகக் கடல் நீரின் உவர்ப்புக்கு ஈடு கொடுத்து நிற்கின்றன''[20]

என்று திரு. கே. வி. இராமன் அவர்கள் கூறுகின்றார்கள்.

முடிபுரை:

இவ்வாற்றான் சங்க இலக்கியங்களிலே பலபடச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற இலக்கியக் காட்சிகளான அகச்சான்றுகள், நடை பெற்றிருக்கின்ற தொல்பொருள் ஆய்வுகளின் மூலம் புறச்சான்று களாக மாறி, உண்மை வடிவம் பெற்றிருப்பதால், புகார் நகரம் ஒரு காலக் கட்டத்தில் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு

ஏற்றம் பெற்றிருந்தது என்பது நமக்குப் புலப்படுகின்றது. எதிர் காலத்தில் தொல்பொருள் ஆய்வுகள் நடப்பது விரிவுபடுத்தப்படு மானால் இன்னும் பூம்புகார் பற்றிய சிறப்பான வரலாறுகளும் இவ்வுலகிற்குத் தெரிய வரும் என்ற நம்பிக்கை தமிழறிஞர்களுக் கும் தமிழ் மக்களுக்கும் மிகுதியான அளவில் உண்டு.

அடிக்குறிப்புகள்:

1) தொல்லியல் ஆய்வுகள்—முன்னுரை—பக். 5.
2) பட்டினப்பாலை, வரிகள் 185-195.
3) பத்துப்பாட்டு மூலமும் – நச்சர் உரையும், முனைவர் உ. வே. சா. நூலக வெளியீடு, பக். 549-550.
4) ,, ,, பக். 550.
5) இராணி, கிழமையிதழ், 15—8—82, பக். 13
6) பட்டினப்பாலை, வரிகள் 75-76
7) பூம்புகார்—தொல் பொ. ஆ. வெளியீடு; பக். 13
8) பட்டினப்பாலை, வரிகள் 105-111
9) பத்துப்பாட்டு மூலமும்–நச்சர் உரையும், முனைவர் உ. வே. சா. நூலக வெளியீடு, பக். 54
10) தொல்லியல் ஆய்வுகள்—முனைவர் கே. வி. இராமன், பக். 10
11) பூம்புகார்—தொல் பொ. ஆ. வெளியீடு, பக். 14
12) பட்டினப்பாலை, வரிகள் 42-43
13) பத்துப்பாட்டு மூலமும்—நச்சர் உரையும், முனைவர் உ. வே. சா. நூலக வெளியீடு, பக். 535
14) பட்டினப்பாலை, வரிகள் 52-53
15) பத்துப்பாட்டு மூலமும்—நச்சர் உரையும், பக். 536
16) காவிரிப்பூம் பட்டினம்–பாரதி தமிழ்ச்சங்க மலர், கல்கத்தா 1965, முனைவர் கே. வி. இராமன், பக். 13
17) இந்தியத் தொல்லியல்—ஓர் ஆய்வுரை. புது தில்லி, 1961-62, பக். 26
18) பட்டினப்பாலை, வரிகள் 135-136
19) தொல்லியல் ஆய்வுகள்–முனைவர் கே வி. இராமன் பக் 22
20) ,, ,, ,, பக். 15

மருத்துவச் சுவடிகளில் நிறங்கள்

த. அழகப்பராசு

சுவடிகள் :

மருத்துவம் தொடர்பான சுவடிகள் சென்னையில் மட்டும் மற்றச் சுவடிகளிலும் மிகுதியாகவே காணப்படுகின்றன. அவற்றுள் அரசினர்க் கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் உள்ள மருத்துவச் சுவடிகளில் பதிமூன்று மட்டும்[1] எடுத்துக்கொண்டு நிறம் பற்றிப் பேசுகின்றது இந்தக் கட்டுரை.

இதில் பேசப்படும் பதின்மூன்று சுவடிகளும் ஒரே காலத்ததாக இல்லாமல் பல்வேறு காலத்தனவாகக் காணப்படுகின்றன. இதில் ஒரு சுவடியில் மட்டும் மலையாள மொழியின் வழக்குகள் காணப்படுகின்றன.[2]

தமிழில் விழி என்பது மலையாளத்தில் மிழி என்றாகும். கூர்மிழி, நடுமிழி, என்பன இச்சுவடியில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் கோழிமுட்டைத்தோடு (கோழிமுட்டையோடு) கசுவண்டி (முந்திரி) என்பனவும் காணப்படுகின்றன.[3] இதன் ஒரு பகுதி தமிழிலும் மறுபகுதி (தமிழ் மருத்துவம்) மலையாள வரிவடிவிலும் காணப்படுகின்றது. இது கொண்டு மலையாள நாட்டுப்பகுதியில் வழங்கிய மருத்துவம் என்றோ, மலையாள மொழியை நன்கு அறிந்தவர் எழுதியது என்றோ கருத இடமிருக்கின்றது.

மருத்துவத்தில் நிறங்களின் இன்றியமையாமை

இலக்கியங்களிலும் மருத்துவத்தில் நிறம் இன்றியமையாத தாய் அமைகின்றது. மருந்துபொருள்களும் நோய்களும் நிறங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

தொழுநோயின் ஆரம்பகால கால்வீக்கம் தாமரை மலரைச் செந்தூரத்துடன் அரைத்துக்கட்ட நீங்கும். ஆனால் அது நாம் இலக்கியங்களில் அதிகமாக காணும் செந்தாமரை அன்று வெண்டாமரை.

செம்மையான வைரம் நோய்நீக்கவும், பொன்மையான வைரம் ரசவாதத்திற்கும், கருமையான வைரம் வாழ்நாள் நீட்டித்தற்கும் பயன்படுகின்றன. வெண்மையான வைரம் வேதியியல் சாலையில் மட்டுமே பயன்படும்.

மரகதம் நஞ்சுப்போக்கும்: ஆனால் அது கரும்பச்சை நிறமான மரகதமன்று. பாசிக்கொத்து அல்லது மயிலிறகு நிறமுள்ள மரகதமாகும்.[4]

இச்சான்றுகள் எல்லாம் நமக்கு மருத்துவத்திற்கும் நிறத் திர்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்கும்.

நிறம் வண்ணம் சொல்லாட்சி:

நிறம் வண்ணம் என்ற இரண்டு சொல்லாட்சிகள் மட்டுமே மருத்துவச் சுவடிகளில் நிறத்தைக் குறிப்பனவாக பயின்றுள்ளன.

பொன்னிறம் கருமை வெள்ளை
பொலிந்திடும் சிகப்புப் போலே
பின்னியும் பச்ச போல
வண்ணங்கள் தோன்றுமாகில்[5]

என்ற பாடலில் இரண்டு சொற்களுமே இடம் பெற்றுள்ளன. வண்ணம் என்ற என்ற சொல் வர்ணம்,[6] வற்ணம்[7] வன்னம்[8] என்ற நிலைகளில் எழுதப்பட்டுள்ளது.

நிறம், வண்ணம் — உயர்திணை அஃறிணை

சீவகசிந்தாமணியில், நிறம் என்பது பொதுவாக உயர்திணை யில் நிறங் குறிக்கவும் வண்ணம் அஃறிணைப் பொருட்களின் நிறங் குறிக்கவும் பயன்பட்டுள்ளது என்பர்.[9]

மருத்துவச் சுவடிகளில் வண்ணம் என்பது பெரும் பான்மையும் அஃறிணைப்பொருட்களின் நிறத்தை உணர்த்தவே வந்துள்ளது.[10] ஆனால் நிறம் என்ற சொல் உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.[11].

வெண்மை:

வெண்மையைக் குறிக்கும் அடிநிலைச் சொற்களாக வெண்[12] வெள்,[13] வெள்ளை[14] என்பன பயன்பட்டுள்ளன. வெண்மையைக் குறிக்க மன்னல்,[15] பால்[16], முருங்கைப்பூ[17] என்ற மூன்று பொருள்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மற்ற எல்லா நிறங்களிலும் வெண்மை நிறமே இந்தச் சுவடி களில் மிகுதியும் ஆளப்பட்டுள்ளது[18]. அது விழியின் வெள்ளைக கும் வெள்ளைக் கடுக்காய் போன்ற மருந்துப் பொருள்களுக்கும் வெண்ணகை போன்ற வருணனைகளுக்கும், வெள்ளெழுத்து என்ற நோய்க்கும் காட்டப்படுகின்றது.

செம்மை

செம்மையை உணர்த்த செம்,[19] செய்ய[20] என்ற சொற் களுடன் சிவப்பு[21], சிகப்பு,[25] சுகப்பு[33] என்ற சொல் மாற்றங் களும் காணப்படுகின்றன. இதனைக் குறிக்கும் பொருள்களாக நெருப்பு[24], அனல்,[26] அழல்,[26], உதிரம்[27], இரத்தம்[28], கதை[29] இந்திரபோகம்[30] போன்றன காணப்படுகின்றன.

கருப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்[31]

என்ற தொல்காப்பியநிலையில் வெகுளியின்போது கண் சிவந்த

தாகக் காட்டுகின்றது நயனவிதி[32], வாயுக்களின் நிறங்களும் கண் சிவத்தலும் தாமரையின் நிறமும் இதன்கண் எடுத்துரைக்கப் படுகின்றன.

கருமை

கருமை நிறத்தினைக் குறிக்க கரு[33] கரும்[34]. கரிய[35] என்ற அடிநிலைச் சொற்களும், கார்[36], இருள்[37], மை[38], முகில்[39] மேகம்[40] போன்ற பொருள்களும் சுட்டப்படுகின்றன.

வாயுக்களின் கருமை நிறமும், கருவேலம்பிசின் போன்ற மருந்துப் பொருட்களும், கருமையான விழிகளும் மேகமும் இதன் கண் காட்டப்படுகின்றன[41] கருமையான விழிகளே இதில் மிகுதி யும் பேசப்படுகின்றன.

மஞ்சள்:

மஞ்சளைக்குறிக்க அடிநிலைச் சொற்களோ, அதைக் குறிப் பனவாக அமைந்தப் பொருடகளோ ஏதுமில்லை. மருந்து பொருளாம் மஞ்சளையும், மஞ்சள் காமாலையினையும், மஞ்சள் நாகக்கல்லினையும் சுட்ட மஞ்சள் நிறம் பயன்பட்டுள்ளது.[42]

பசுமை:

பசுமையைக் குறிக்க பசு,[43], பச்ச[44] என்ற இரு அடி நிலைச் சொற்கள் அமைந்துள்ளன. பசுமை பெரும்பான்மையும் பச்சிலை யைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது. மேலும் சுபானவாயு, பச்சவாதம் இரண்டுக்கும் பச்சை நிறம் காட்டப்படுகின்றது[45].

நீலம்:

சொற்களும், பொருள்களும் இதனைக் குறிப்பானவாக சுட்டப் படவில்லை. பிராணவாயு, தனஞ்செயவாயு இவற்றைக்குறிக்கவும், நீல காயத்தினைக் குறிக்கவும் இந்நிறம் பயன்பட்டுள்ளது[46].

பொன்:

மஞ்சள் நிறத்துடன் பொன்னிறம் தொடர்பு உடையது என்றாலும் பொன்னிறம். பொன்வண்ணம் என்று ஆசிரியரே குறிப் பதால் தனியே உரைக்கப்படுகின்றது.

பொன்னின் வண்ணமாகும்[47] (நாகன்வாயு)
பிருதிவி பொன்னிறமாமே[48]

புகை:

புகை கருமை, வெண்மை இரண்டையும் குறிக்க பயன்படுத்தப் பட்டுள்ளது. கருமையைக் குறிக்கையில் புகை நிறம் என்றே விளிக்கின்றார்.

கார்மேகப்புகை நிறம்[49]
வெண்புகை புவென்று வொளியும்[50]

மேலும் பல நிறங்கள் :

மாநிறம் பெண்ணுடம் தொடர்புபடுத்தி
மாதுமா நிறத்தாளாகி[51]

என்று ஓரிடத்தில் மட்டும் பேசப்படுகின்றது. நவமணிகளைப் பற்றிய குறிப்பைக் கண் மருத்துவச் சுவடியொன்று காட்டுகின்றது.[52] வைரம், முத்து இரண்டும் வெண்மையாயும், பச்சையென்றழைக்கப்படும் மரகதம் பச்சை நிறமாயும் மாணிக்கம் செந்நிறமாகவும் நீலமணி நீலநிறமாகவும், புட்பராகம் பொன் போன்றும், கோமேதகம் (கோமியம் நிறம்) மஞ்சளும் சிகப்பும் கலந்ததாகவும் அமையும்.[52] தண்ணீருக்கு நிறமில்லை என்பர்.

இந்தவண்ணம் தண்ணீர்தான்[53] (பருவசவாயு) என்பதில் தண்ணீரை மற்றொன்றுக்கும்

அப்புவது பளிங்கு வண்ணம்[54]

என்பதில் தண்ணீருக்கு மற்றொன்றையும் நிறமாகக் காட்டுகின்றார். இவ்விரண்டும் நிறமற்ற தன்மையைக் குறிப்பதாகவோ அன்றி வெளிர் வெண்மையைக் குறிப்பதாகவோ இருக்கலாம்:

மாந்தர் நிறம் :

இச்சுவடிகள் பதின்மூன்றிலும் மாந்தர் நிறமுழுமையினைக் குறிப்பதாக இரண்டு சான்றுகளே உள்ளன. ஒன்று பெண்ணைப் பற்றியது மற்றது ஆணைப்பற்றியது.

மாதுமா நிறத்தவள்[55]
மைநிறத்தவன்போல[56]

நிறம்-மருத்துவத்தொடர்பு :

இம்மருத்துவச் சுவடிகள் இடம்பெற்றுள்ள நிறம் பற்றிய குறிப்புகளை:

(1) மருத்துவத் தொடர்பானது
(2) மருத்துவத் தொடர்பில்லாதது

என்று பொதுவகையால் இரண்டாகப் பகுக்கலாம். மருத்துவத் தொடர்பானவைகளை

(1) நோய்தொடர்பானது
(2) மருந்துத் தொடர்பானது
(3) பிறதொடர்பானது

என மூன்றாக வகுக்கலாம்.

நோய்தொடர்பின:

கண்ணோய் வரத்தொடங்கினால் தொடக்கத்தில் கண்கள் கருமையாகவும்[57] பின்னர் செம்மையாகவும்[58] காணப்படும். நோய்வந்த பின்னர் மயக்கத்தால் எல்லாப் பொருள்களும் தெளிவாகத் தெரிவதில்லை[59]. அக்கண்ணோயின் முதிர்ச்சி நிலையில்,

சதைபோல் சிவந்து காட்டும்[60]

கண்ணிலெங்கும் இரத்தமே எழுந்து காட்டும்[61]

எழுத்துக்களைக் கண்டால் வெண்மையாகவே தோன்றுகின்ற அல்லது எழுத்துக்கள் சரிவர புலப்படாத நிலை வெள்ளெழுத்து எனப்படுகின்றது.[62] கண்ணோயால் பொன்மை, கருமை, வெண்மை, சிவப்பு, பச்சை எல்லா நிறங்களும் தெரியும் என்று ஒரு பாடல் காட்டுகின்றது.[63] மஞ்சள் காமாலை நோயினையும் அதன் தன்மை யினையும் கூறுகின்றார்.[64]

மருந்துத் தொடர்பின:

நிறங்கள் மருந்துகளைப் பிரித்தறியும் கருவிகளாகத் திகழ்கின்றன. பூலாம்செடி கருமை கலந்த நிறத்தில் காணப்படும். எனவே அதன் சாற்றை,

கருவேலம் பூலாச்சாறு[65] என்கிறார் அதன் வேரின் நிறத்தினைக் குறிக்க வந்தபோது,

வெண்மையாம் பூலாவேர்[66] எனச் சுட்டுகின்றார்.

வேலமரம் வெண்மையும் மஞ்சளும் கலந்த நிலையில் இருக்கும். அதில் கருமைநிற வேலும் உண்டு. அதன் பிசினும் மருந்து செய்யப் பயன்படுகின்றது. அதனை கருவேல் என்றழைக்கின்றார்[67].

கடுக்காயை நாம் காணும் கடுக்காயிலிருந்து பிரித்துக் காட்ட வெள்ளைக்கடுக்காய் என்கிறார்[68]. அது மஞ்சள் கலந்த வெண்மையுடன் காணப்படும்.

பிறதொடர்பின:

நோயும் மருந்தும் தவிர வாயுக்களின் நிறங்களைப்பற்றி வைத்திய சிந்தாமணி என்னும் சுவடியானது பேசுகின்றது. சுயம்பானம் என்னும் வாயு கறுப்பாகவும்[69] அபான வாயுவின் நிறம் பச்சையாகவும்[70] பருவச வாயுவின் நிறம் தண்ணீர் நிறமாகவும்[71] அக்கினிவாயு, கூர்மவாயு இரண்டும் சிகப்பாகவும்[72] வியான வாயுவின் நிறம் பால் நிறமாகவும்[73] உதாணவாயுவின் நிறம் மின்வண்ணமாகவும்[74] நாகன் எனும் வாயு பொன்னிறமாகவும்[75] இருப்பதாக இந்நூல் காட்டுகின்றது.

மருத்துவத்தொடர்பற்றன:

மருத்துவத்தொடர்பில்லாமல் நிறம் பயின்றுள்ள இடங்கள் பெரும்பான்மையும் மனிதர்களின் உறுப்புத் தொடர்பானவையே. வெண்ணகையின் இயல்பும்[76] கருங்கண் செங்கண் என கண்ணின் நிலைமையும்[77] குழலைக்காருக்கு ஒப்பிடுதலும்[78] இந்த வகையில் அடங்கும்.

நிறப்பயன்பாட்டு உத்திகள் :

நிறப்பயன்பாட்டு உத்திகளாக நாம் நிறங்களின் இணைப்பையும், உவமைவழி நிறம் உணர்த்தலையும், அடைபாட்சியையும் அடுக்கிச் சொல்லுதலையும் கொள்ளலாம்.

நிறஇணைப்பு – எழுநிறம் (வானவில்)

நிற இணைப்பில் அதிகமாக எழுநிறம் கொண்ட வானவில் நிற்கின்றது[79]. இதில் சிகப்பு, பச்சை, ஆரஞ்சு, மஞ்சள், நீலம், கருநீலம், ஊதா என்ற எழுநிறமுள்ளது.

ஐந்நிறம்:

இதற்கடுத்த நிலையில் ஐந்து நிறங்களைக் காண முடிகிறது. பொன்னிறம், கருமை, வெள்ளை, சிகப்பு, பச்சை என்ற ஐந்தையும் சுட்டி அதற்கடுத்தபாடலில்,

ஐந்துநிறமுடன் தோன்றும்[80] என்கிறார்.

இருநிறம் :

கருமையும் வெண்மையுமாக இணைத்து

சாலவே கருமை வெண்மை[81]
வெள்ளையில் கருப்பு தோன்றில்[82]
கருப்பு வெள்ளைச் சிதறியே[83]

என மூன்று இடங்களிலும்

வெள்ளையில் சிகப்பு பற்றி[84]
வெள்ளையில் சிகப்பு தோன்றில்[85]

என்ற ஈரிடங்களில் வெண்மையும் செம்மையும்

கருத்த கண்ணோ செவந்திடுமே[86]

கருமையும் செம்மையும் என ஓரிடத்திலும் இன நிறங்கள் இடம் பெற்றுள்ளன.

உவமைகள்வழி உணர்த்தல் :

கார்-குழல் ஒப்பீட்டில் இரண்டு உவமைகள் நிறம் விளக்க வந்துள்ளன. அதனுடன் கருமை நிறத்தைக் காட்டமையது தேய்த்தாப்போல[87] என்னும் மை நிறத்தவன் என்றும் வந்த உவமைகள் புலப்படுத்தும் மேலும் கருமையும் முகிலும் சேர்ந்த நிலையையும் உவமையாகப் பயன்பட்டுள்ளது.[88]

கண்ணோயால் சிவந்து காட்டுகின்ற நிலையினை

சதைபோல் சிவந்து காட்டும்[89]
இந்திரகோபம்போற் சிவக்கும்[90]

என்று உடல் சதையையும் இந்திர கோபத்தையும் சிவப்பிற்குக் காட்டுகின்றார். அத்துடன் உதிரத்தைக் குறிக்க வந்தவர் கொழுந்து விட்டெரிகின்ற தீக்கு உவமை காட்டுகின்றார்.[91]

அடைவளம்:

இதன் கண் பயின்றுள்ள அடைகளை

(1) நிறமே அடையாக அமைதல்

(2) நிறத்துக்கு அடையாக அமைதல்

என இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

நிறஅடை :

வெண்மையில் வெண்சாறு[92], வெண்பூ[93], வெண்புகை[94] வெண்ணகை[95]. வெண்கரு[96] என வெண் அடையாதலும் வெள்ளெழுத்து[97] வெள்ளெலும்பு[98] என வெள் அடையாதலும் வெள்ளைக்கடுக்காய்[99] வெள்ளைச்சீலை[100] என வெள்ளை அடை யாதலும் என்ற மூன்று நிலையைக் காணலாம்.

கருவிழி [101] கருமணி[102] கருமிழி[103] என்பதில் கரு என்பதும், கருப்பு வண்ணம்,[104] கருத்துக்காணும்,[105] கருத்த கண்[106] என்பதில் கருத்தலும், கரியகண்[107] கரிய நீலம் என்பதில் கரிய என்பதும் கார்நெறி[109] என்பதில் கார் என்பதும் கருமையைக் குறிக்க அடைகளாக உள்ளன.

செய்யகண்,[110] செய்யகயலம்[111] என்பதில் செய்ய என்பதும், செங்குமுதம்,[112] செங்கண்[113] போன்றவற்றில் செம் என்பதும் சிவந்திடும் குமுதம்[114] என்பதில் சிவத்தலும் சிகப்பு நிறம் மற்ற பொருள்களுக்கு அடைகளானமையைக் காட்டும்.

நிறத்துக்கு அடை:

வெள்ளைக்கு மருவார்,[115] பெரு,[116] மின்னாய,[117] மருவிய,[118] தேறிடும்[119] என்ற சொற்களும் சிகப்புக்கு கனக்க,[120] தினவுடன்[121] ஒள்,[122] முன்னிய[123] அரைநிற[124] பொலிந்திடும்[125] என்ற சொற்களும், கருமைக்கு மயங்கிடும்,[126] நல்(லிருள்)[127] தெளிவுறு[128] என்ற சொற்களும் பச்சைக்கு சிதறிடும்[129] பரிந்திடும்[130] என்ற சொற்களும், மஞ்சள் நிறத்திற்கு போற்றும்[131] சேர்ந்திடு[132] என்ற சொற்களும் அடைகளாக அமைந்துள்ளன.

ஈரடைகள்:

விளங்கு செங்குமுதம் 133, பெருபரணிவெள்ளை 134 என்ற இரண்டும் நிறந்துக்கு அடைகளாக அமைந்தும் செந்திரு உமையாள் 135 கார்நெறிக்குழல், 136 கருங்குழிக்கண் 137, என்ற மூன்றும் நிறம் மற்றவற்றிற்கு அடையாகவும் ஈரடைகளாகத் திகழ்கின்றன.

மூவடைகள் :

காா்மேகப்புகை நிறம் 138 கருவேலம்புலாச்சாறு 139





என்ற இரண்டு மட்டுமே மூவடைகள் அமைந்துள்ள இடங்களாகும். மேலிரண்டையும் மேற்கண்ட இரண்டு நிலைகளில் பகுக்கமுடியும்.

அடுக்கிச் சொல்லுதல்:

அடுக்கி சொல்லுகின்ற உத்தியையும் மருத்துவச் சுவடிகளில் காணமுடிகிறது.

கருவிழி கருத்துக்காணும் 140

கறுப்பின் மீது முகில்போலும் மயக்கம் 141.

என்பன கருமையிலும்,

செய்ய கண்ணீர் சிவந்த செந்நீர் 142.

என்பது செம்மையிலும் அடுக்கிச் சொல்லும் நிலையைப்பெற்று உள்ளன.

முடிப்புரை :

(1) நிறத்தைக்குறிக்க நிறம் வண்ணம் என்ற இரண்டு சொற்கள் மட்டுமே பயின்றுள்ளன.

(2) நிறத்தைக் குறிக்கின்ற சொற்களும், பொருள்களும் மற்ற இலக்கியங்களிலும் மிகுதியாக ஆளப்பட்டுள்ளன.

(3) மாநிறம், தண்ணீர் நிறம், பளிங்குநிறம் என்று சில புதிதான நிறங்கள் கூறப்பட்டுள்ளன.

(4) பெரும்பாலான நிறங்கள் மருத்துவத் தொடர்பாகவே வந்துள்ளன. மருத்துவத் தொடர்பற்ற நிறங்கள் மிகச் சிலவே.

(5) வைத்திய சிந்தாமணியில் மட்டும் பலவகை வாயுக்களின் நிறங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(6) நிறங்களை இணைத்துக் கூறுகின்ற பான்மையும், உவமைவழி நிறம் உணர்த்தலும், அவற்றை அடைகளைக்கொண்டு தெளிவாக்குதலும், திறம்படுத்துதலும், அடுக்கிச் சொல்லுதலும் இம்மருத்துவச் சுவடிகளில் ஆளப்பட்டுள்ள உத்திமுறைகளாகும்.

(7) பொதுவாக மருத்துவத்தில் நிறங்கள் இன்றியமையாத ஓரிடந்தனை வகிக்கின்றது.

அடிக்குறிப்புகள் :

1. அகத்தியர் நோயின்சாரம் (ஆர் 5427), தேரையர் நோயின் சாரம் (ஆர். 3413), திருமூலர் கருவுற்பத்தி (ஆர் 3409) அகத்தியர் பரிபாஷை (ஆர். 4923), வைத்திய சாத்திரம் (ஆர். 4923) வைத்திய நூல் (ஆர். 7841) வைத்தியம் (ஆர் 7110) புலிப்பாணி வைத்தியம் (ஆர். 2448) நயன வைத்திய விதி (ஆர். 8428) வைத்திய சிந்தாமணி, கண் மருத்துவம் (ஆர், 8640) கண் வைத்தியம் (ஆர். 413) கண் வைத்தியம்-2 (ஆர். 2516), நயனவிதி (ஆர். 2. 1803)
2. நயனவிதி (ஆர். 1803)
3. ,, 39, 28. 40, 45, 88, 110
4. அகத்தியர் பாலவாகடம் பாடல் 28, 63, 79
5. கண் வைத்தியம் 48
6. வைத்திய சாத்திரம் 10, புலிப்பாணி வைத்தியம் பா.14,18
7. மருத்துவ சிந்தாமணி 10, வைத்திய நூல் 68, 75
அகத்தியர் நோயின் சாரம் 78
8. நயனவிதி 21,
9. சீவகசிந்தாமணியில் நிறம் வே. சீதாலச்சுமி பக். 3
10. வைத்திய சிந்தாமணி 10, 44, 45, 49, 52
11. கண் மருத்துவம் 56.
11. நயனவிதி 4, நயனவைத்தியவிதி | மூன்றும் உயர்திணை
அ. கண் வைத்தியம்-2-51
ஆ. நயன வைத்திய விதி 29. கண் வைத்தியம் 14.
கண் வைத்தியம் 2, 56
12. கண் வைத்தியம் -(2) 40, 41, 118 வைத்திய சாத்திரம் 12
புலிப்பாணி வைத்தியம் 28
13, கண் வைத்தியம் (2) 173, வைத்திய சிந்தாமணி-29
கண் வைத்தியம் 78
14. கண் வைத்தியம் 4, 29, நயனவிதி 29, வை ததிய நூல் 11
15. கண் வைத்தியம்–(2) 118
16. வைத்திய சிந்தாமணி 43
17. கண் வைத்தியம் 56
18. கண் வைத்தியம் 4. நயனவைத்திய விதி 29, 30,
நயனவிதி 29, புலிப்பாணி வைத்தியம் 19, 23
கண் வைத்தியம் (2) 8, 40, 41, 56, 64, 98, 105,
118, 153, 163, 173,

19. கண் வைத்தியம் (2) 154, 189
20. கண் வைத்தியம் (2)–5, 60
புலிப்பாணி வைத்தியம் 28
21. கண் வைத்தியம் 49
22 கண் வைத்தியம் (2) 23
23. கண் வைத்தியம் 23
24. வைத்திய சிந்தாமணி 47
25. நயனவைத்திய விதி 9
26. கண் வைத்தியம் (2) 116
27. கண் வைத்தியம் (2) 116
28. வைத்திய நூல் 68
29. நயனவிதி 13
30. நயனவைத்திய விதி 51
31. தொல்காப்பியம்-உரியியல்-73
32. நயனவைத்திய விதி 40
33. நயனவைத்திய விதி 41
34. வைத்தியம் 96
அகத்தியர் நோயின்சாரம் 10
34. கண் வைத்தியம் 190, கண் வைத்தியம் (2) 68
35. கண்வைத்தியம் 184. நயகாண வைத்திய விதி 12
36, நயனவைத்திய விதி 20
37. நயனவைத்திய விதி 3, கண் வைத்தியம் (2) 262
38. கண் வைத்தியம் (2) 158, 159
39, கண் வைத்தியம் (2) 49.
40. வைத்திய சிந்தாமணி 100
41. வைத்திய சிந்தாணி 10. நயனவைத்திய விதி 3,14,20.31
கண் வைத்தியம் (2) 77, 98, 123, 158, 159
கண் வைத்தியம் 62. புலிப்பாணி வைத்தியம் 75
திருமூலர் இருபுற்பத்தி 6
42. நயனவைத்திய விதி 25 கண் வைத்தியம் (2) 137,
நயனவிதி 56, 58
43. கண் வைத்தியம் (2) 54
44. கண் வைத்தியம் 49
45. கண் வைத்தியம் (2) 8. கண் வைத்தியம், 3, 49
நயன வைத்திய விதி 38
46. வைத்திய சிந்தாமணி 10, 50, கண் வைத்தியம் (2)10,35
47. வைத்திய சிந்தாமணி 46
48. வைத்திய சிந்தாமணி 9
49. ,, ,, 10
50. கண் வைத்தியம் (2) 108

51. கண் வைத்தியம் 14
52. கண் வைத்தியம் (2), 21
53. (அ) நவமணிகள் டி. எஸ். வைத்தியநாதன் எழில்மணி பதிப்பகம் திருச்சி 2, (1969. இரண்டாம் பதிப்பு) பக். 28–169
53. வைத்திய சிந்தாமணி 52
54. ,, ,, 10
55. வைத்திய சிந்தாமணி 10
56. கண் வைத்தியம் (2) 159
57. நயனவைத்திய விதி 51
58. கண் வைத்தியம் 80
59. கண் வைத்தியம் (2) 62
60. நயன வைத்திய விதி 13
61, கண் வைத்தியம் (2) 48
62 கண் வைத்தியம் (2) 98
63. கண் வைத்தியம் 48
64. கண் வைத்தியம் (2) 98, 58, 98
65 கண் வைத்தியம் (2) 123
66. நயன வைத்திய விதி 30
67 நயனவிதி 14
68 நயன வைத்திய விதி 128, புலிப்பாளி வைத்தியம் 23
69. வைத்திய சிந்தாமனி 48
70. ,, ,, 42
71. ,, ,, 52
72. ,, ,, 10, 47
73. ,, ,, 43
74. ,, ,, 44
75. வைத்திய சிந்தாமணி 44
76. கண் வைத்தியம் (2) 153
77. நயன விதி 21
78. நயன வைத்திய விதி 20
கண் வைத்தியம் (2) 77
79. கண் வைத்தியம் (2) 51
80. கண் வைத்தியம் 48, 50
81. ,, 50
82. ,, 46
83. வைத்திய சிந்தாமணி 8
84. நயன வைத்திய விதி 3
85. கண் வைத்தியம் 23
86. கண் வைத்தியம் (2) 158

87. ,, 159
88. புலிப்பாணி வைத்தியம் 53
89. நயன வைத்திய விதி 13
90. ,, ,, 51
91. கண் வைத்தியம் (2) 116
92. ,, 64
93. வைத்திய நூல் 58
94 கண் வைத்தியம் (2) 108
95. ,, 153
96. வைத்திய சாத்திரம் 18
97. கண் வைத்தியம் 60
98. ,, 173
99. வைத்திய சிந்தாமணி 8
100. வைத்தியசாத்திரம் 12
101. நயன விதி 31
102. கண் வைத்தியம் (2) 98
103. கண் வைத்தியம் 90
104. வைத்திய சிந்தாமணி 10
105. நயன விதி 31
106. நயன வைத்திய விதி 23
107. கண் வைத்தியம் (2) 12
108. நயன வைத்திய விதி 27
109. ,, ,, 20
110. கண் வைத்தியம் (2) 189
111. ,, 154
112. ,, 60, 66, 84
113. ,, 5
114. ,, 88
115. நயனவைத்திய விதி 29
116. நயன விதி 19
117. கண் வைத்தியம் (2) 118
118. கண் வைத்தியம் 8
119. நயன வைத்திய விதி 46
120. நயன விதி 40
121. ,, 13
122. கண் வைத்தியம் (2) 116
123. ,, 62
124. கண் வைத்தியம் 23
125. ,, 48
126. நயன விதி 3

127. கண் வைத்தியம் (2) 62
128. ,, 47
129. கண் வைத்தியம் 47
130. ,, 49
131. நயனவிதி 25
132. கண் வைத்தியம் (2) 137
133. ,, 60
134. நயனவைத்திய விதி 19
135. கண் வைத்தியம் 3
136. நயன வைத்திய விதி 20, தேரையர் நோயின் சாரம் 28
137. நயனவைத்திய விதி 28
138. வைத்திய சிந்தாமணி 10
139. கண் வைத்தியம் (2) 123
140. நயன வைத்திய விதி 31
141. கண் வைத்தியம் (2) 49
142. ,,

——:|:——

மொழிப்போர் வெல்க!

விழிப்போரே நிலைகாண்பார்!
விதைப்போரே அறுத்திடுவார்
களை கண்டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார்
அறிந்தோரே உயர்ந்திடுவார்!
ஆதல் ஆர்வம்
செழிப்போரே இளைஞர்களே,
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுக நம் தாய்!
மொழிப்போரே வேண்டுவது
தொடக்கஞ் செய்தீர் வெல்வீர்
மொழிப்போர் வெல்க!

—பாவேந்தர் பாரதிதாசன்.

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்,** எம். எல். ஏ.,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.
2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேரா. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.
4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
367, மேல வீதி, தஞ்சாவூர்.
5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
கரந்தை, தஞ்சாவூர்-2.
6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்,** எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர், உ. மே. பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்-2.
7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்** பி. ஏ.,
அமைச்சர், க. த. சங்கம், பொழிற்றொண்டர்.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20—00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	... 250—00	... 250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	... 003—00
ஆயுள் வரி	... 100—00

——— ——— —:—:— ——— ———

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு. .... அவர்களுக்கு

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்–613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
பரத சாத்திரம்	1—50
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் - (பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் – கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள்:	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம் கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,